REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 18 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 246 | Tuesday 18, October, 2022 | 16பக்கங்கள் | 40/-

MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
OOKLA® தடையற்ற தொடர் வெற்றியை கடந்த 3 வருடங்களாக SLT-MOBITEL பதிவு செய்துள்ளது!
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

## பார்வையற்றோர் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி அலுவலகம் முழு ஆதரவு

### ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவிப்பு



பார்வையற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி அலுவலகம் முழுமையான ஆதரவை வழங்குமென ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு 06

## 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு இன்று பாராளுமன்றில்

### 18 முதல் 21 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடுகிறது



2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவுசெலவுத்திட்டம்) இன்று (18) பாராளுமன்றத்தில் (முதலாவது மதிப்பீட்டுக்காக) சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வாரத்துக்கான பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக அண்மையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பாராளுமன்றம் இன்று முதல் 21ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், ஒவ்வொரு நாளும் மு.ப 9.30 மணி முதல் 06

## 22 ஆவது அரசியலமைப்பில் இரு திருத்தங்கள் மாத்திரமே

### நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் எதிர்க்கட்சி தலைவரால் கோரப்பட்டுள்ள இரு திருத்தங்களை மாத்திரமே மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதுடன் வேறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லையென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

அத்துடன் தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களே கையுயர்த்தி பாராளுமன்றத்தை 06

# எரிபொருள் விலைகள் மீண்டும் குறைப்பு

### CPC மற்றும் IOC நிறுவனங்கள் நடவடிக்கை



- ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை 40 ரூபாவால் குறைப்பு
- லங்கா ஒட்டோ டீசல் விலை 15 ரூபாவால் குறைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் நேற்று இரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று இரவு 9 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின் சக்தி அமைச்சர் நேற்று தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 40 ரூபாவாலும் லங்கா ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய விலையின்படி ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 370 ரூபாவாகவும் லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் புதிய விலை 415 ரூபாவாகவும் இன்று முதல் விற்பனை செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஏனைய எரிபொருட்களின் விலைகளில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லையென்றும் ஒக்டேன் 95 ரக பெற்றோல், 06

### அநுராதபுரத்தில் கோர விபத்து;

# மூன்று வயது சிறுவன் உட்பட மூவர் பலி

**கார் மரத்துடன் மோதி அனர்த்தம்**



அநுராதபுரம், பாதெனிய தலதாகம வீதியில் ரிதிபதியெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று வயது சிறுவன் உட்பட மூவர் பலியாகியுள்ளனர்.

இவ்விபத்து நேற்று (17) காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக நாகொல்லாகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரத்திலிருந்து பாதெனிய நோக்கி பயணித்த காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கருகிலுள்ள மரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இந்த சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்களை காரிலிருந்து வெளியே எடுக்க சுமார் 20 நிமிடங்கள் போராட வேண்டியிருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இதனையடுத்து, காயமடைந்த மூவர் வாரியபொலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிறுவனும் ஏனைய இருவரும் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் 06



### இலங்கையின் முயற்சிகளுக்கு பரிஸ் கிளப் பூரண ஆதரவு

கடன் நெருக்கடிகளுக்கும் உதவும் – ஷெஹான் 03



### தாமரைக் கோபுரத்தை பார்வையிடும் நேரம் நீடிப்பு

புதிய நேர அட்டவணை வெளியிட்டு வைப்பு 03



### நாவலப்பிட்டியில் கைதான 15 பேரும் பிணையில் விடுதலை

வழக்கு விசாரணை டிசம்பர் 13 ஆம் திகதி 03

## முச்சக்கர வண்டிகளுக்கு அடுத்த வாரம் முதல் மேலதிக எரிபொருள்

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு



முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த வாரம் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது முச்சக்கரவண்டிக்கு வாரத்திற்கு 05 லீற்றர் வீதம் கோட்டா வழங்கப்படுவதாகவும், அது போதாதென முச்சக்கரவண்டி சாரதிகள் கடந்த வாரம் மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறை அமைச்சரிடம் மகஜர் ஒன்றை வழங்கியிருந்தனர்.

அத்துடன், எதிர்காலத்தில் விலைச் சூத்திரத்தின்படி செயற்படுவதாகவும், இறக்குமதி செய்யப்படும் எரிபொருளால் தற்போது ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளதாகவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படுவதால் 06

## மன்னார் சதொச மனித புதைகுழி மீண்டும் அகழ்வு

### உத்தரவை வழங்கியது மன்னார் நீதிமன்றம்

மன்னார் சதொச மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கான திகதியை அறிவிக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஏ.எஸ்.ஹிபதுல்லாஹ் முன்னிலையில் வழக்கு நேற்று (17) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் அழைப்பாணைக்கமைய, சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ நேற்று (17) நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

வழக்கு தொடர்பான அறிக்கைகளை கடந்த 06

## பிரியமாலிக்கு ரூ. 80 இலட்சம் வழங்கினாரா அஸாத் சாலி?

### வாக்கு மூலம் வழங்க நேற்று CID க்கு சென்றார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கோடிக்கணக்கான நிதியை மோசடி செய்துள்ளாரென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி தொடர்பாக மேற்கொள்ளப்படும். விசாரணைகளின்படி வாக்குமூலமொன்றை பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி நேற்று குற்றத்தடுப்பு விசாரணை 06

## இந்த வருடம் ஆடம்பரமான கிறிஸ்மஸ் விழாக்கள் வேண்டாம்

### கத்தோலிக்கர்களுக்கு பேராயர் ரஞ்சித் அழைப்பு



இவ்வருடத்தில் நத்தார் பண்டிகையை எளிமையாக கொண்டாடுமாறும், அலங்காரங்களுக்காக ஆடம்பரமாகச் செலவு செய்வதைத் தவிர்க்குமாறும் கத்தோலிக்கர்களுக்கு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

நீர்கொழும்பு, படபத்தல புனித தெரேசா தேவாலயத்தின் 75ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சமய ஆராதனையின் போது 06

## 2,07,000 விவசாயிகளுக்கு கடன் வழங்க 7,124 பில். நிதி

### விவசாய அமைச்சினால் நிதி ஒதுக்கீடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரும்போக நெற் செய்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வகையில் விவசாயிகளுக்கு விவசாய வங்கிகள் ஊடாக கடன் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கடன் 06

மன்னார், பேசாலை பகுதிகளிலிருந்து

## தனுஷ்கோடியில் தஞ்சம் புகுந்த இலங்கையர் அறுவர்

### இதுவரை சென்றோர் தொகை 181ஆனது

**திருச்சி சாஹுல் ஹமீட், மன்னார் குறூப், யாழ்.விசேட நிருபர்கள்**



மன்னார் பேசாலையைச் சேர்ந்த 06 பேர் நேற்று திங்கட்கிழமை (17) காலை தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர். 06

நிலையான வைப்புக்களுக்கு இப்பொழுது அதிக வட்டி

| 400 நாட்கள் | 300 நாட்கள் | 200 நாட்கள் | 100 நாட்கள் |
|---|---|---|---|
| 24% வ.வ.வீ (23.75% வ.வி.வீ) | 22% வ.வ.வீ (22.41% வ.வி.வீ) | 21% வ.வ.வீ (21.99% வ.வி.வீ) | 20% வ.வ.வீ (21.50% வ.வி.வீ) |

COMBANK DIGITAL மற்றும் flash ஊடாக முதலீடு செய்து 1% மேலதிக வட்டியை பெறுங்கள்

| 400 நாட்கள் | 300 நாட்கள் | 200 நாட்கள் | 100 நாட்கள் |
|---|---|---|---|
| 25% வ.வ.வீ (24.73% வ.வி.வீ) | 23% வ.வ.வீ (23.45% வ.வி.வீ) | 22% வ.வ.வீ (23.09% வ.வி.வீ) | 21% வ.வ.வீ (22.65% வ.வி.வீ) |

ஆகக் குறைந்த வைப்பான ரூபாய் 500,000/- உடன் உங்கள் சேமிப்பை இன்றே ஆரம்பியுங்கள்

சுய பதிவிற்காக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது www.combank.lk இனை பார்வையிடவும்.

COMMERCIAL BANK
உங்கள் நலனே எங்கள் நோக்கம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Fitch Rating AA- (lka) | +94 112 353 353 | www.combank.lk

# நாட்டு மக்களுக்கு உணவு வழங்கும் முறையான வேலைத்திட்டத்தை அமுல்படுத்தாவிடின் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டியிருக்கும்

## சியம்பலாண்டுவ பிரதேசத்திலுள்ள ரத்துமட, வீரகந்தவல கிராம மக்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (16) காலை சியம்பலாண்டுவ பிரதேச செயலக பிரிவில் ரத்துமட, வீரகந்தவல ஆகிய பிரதேசங்களுக்கு அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பயிர்ச்செய்கைகளை நேரில் பார்வையிட்டார். அத்துடன் மொனராகலை மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் குறித்தும் அவர் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்நிலங்களுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, விவசாயிகளுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். இதன்போது தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாக முன்வைக்கும் சந்தர்ப்பம் விவசாயிகளுக்குக் கிடைத்தது. உரம், கிருமிநாசினி, களைகொல்லிகளின் பற்றாக்குறை, காணிப்பிரச்சினை, நீர்ப்பிரச்சினை, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் போன்றவை தொடர்பிலும் விவசாயிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளை விவசாய நிலத்திற்கு

**விவாதம் செய்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. வீதியில் இறங்கி இரத்தம் சிந்தப் போவதாக சிலர் கூறியுள்ளனர். மக்களுக்கு உணவு வழங்கும் முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் இரத்தம் சிந்துவது அன்றி பட்டினியால் சாகவே நேரிடும்.**



அழைத்த ஜனாதிபதி, விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை இங்கு விசேட அம்சமாகும். தமது பிரதேசத்திற்கு ஜனாதிபதி ஒருவர் வருகை தந்தது இதுவே முதற்தடவை என்று குறிப்பிட்ட விவசாயிகள், தங்களுக்கு அருகில் வந்து பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் ஊடாக பதிவு செய்து கொண்ட ஜனாதிபதி, இதற்கென தனியான மேலதிக செயலாளர் ஒருவரை ஜனாதிபதி அலுவலகத்தில் நியமித்து, பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதுதவிர, பிரதேச மக்கள் எதிர்நோக்கும் கல்வி, வீதி, வீடமைப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன. முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் செவிமடுத்த ஜனாதிபதி, பல சிரமங்களுக்கு மத்தியில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதேச மாணவர்களை பல்கலைக்கழகக் கல்வி வரை அழைத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் திரும்பி வரும் வழியில் ஜனாதிபதி, சியம்பலாண்டுவ களுஓப்பா தர்மசோக்க ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலைக்கும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சென்று அங்கிருந்த மாணவர்களிடம் நலம் விசாரித்தார்.

முன்னறிவிப்பின்றி அவர் அந்த இடத்திற்கு வந்தாலும், மாணவர்கள் 'ஜெயமங்கல' கீதம் பாடி



ஜனாதிபதியை வரவேற்றனர்.

சியம்பலாண்டுவ, ரத்துமட மற்றும் வீரகந்தவல ஆகிய பிரதேசங்களைச் சூழவுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "உணவு பாதுகாப்புத் திட்டத்தை தொடர்ந்தும் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஆரம்பித்துள்ளோம். அதற்கான அனைத்து வசதிகளும் வழங்கப்படும். எதிர்வரும் பெரும்போகத்தில் நெல், சோளம் மற்றும் ஏனைய பயிர்களை மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அதன் ஊடாக அடுத்த பெரும்போகத்தின்போது அல்லது அதற்கு முன்னர் ஒரு சிறந்த அறுவடையைப் பெற வேண்டும். நல்ல அறுவடை கிடைத்தால் உற்பத்தி பெருகி நாடு ஸ்திரமடையும்" என்றார்.

"பயிரிடுவது மட்டுமன்றி, அறுவடையை சேகரிக்கவும், விரயத்தைக் குறைக்கும் வகையில் அதனைக் களஞ்சியப்படுத்தவும் விநியோக வலையமைப்பை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதில் குறைபாடுகள் ஏற்படலாம். எனினும் அவை தீர்க்கப்பட்டு, வெற்றிகரமாக இச்செயற் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

பெரும்போகம் வரை, உணவு பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் சிலர் தற்போது பல சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். எனவே இங்குள்ள உற்பத்திப் பொருட்களை அப்பிரதேசங்களுக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்து மக்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். இந்தப் பகுதியில் உள்ள சிறிய குளங்களை மறுசீரமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்த போகம் வரை நாடு முழுவதும் எவ்வித தடையுமின்றி உணவு பாதுகாப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும். மேலும், நமது தற்போதைய பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படவும் வேண்டும்.



**எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலக உணவு நெருக்கடிக்கும் நாம் தயாராக வேண்டும். கடந்த போகங்களின்போது உரம் கிடைக்காதது தொடர்பில் விவசாயிகள் அனைவருக்கும் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்**

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். அதற்கமைய அடிப்படை இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம். எமக்கு கடன் வழங்கிய முக்கிய நாடுகளான சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். நான் ஜப்பானுக்குச் சென்றபோது, வெளியுறவு அமைச்சர் மற்றும் பிரதமரிடம் இது குறித்து ஆராய்ந்தேன்.

மேலும், அண்மையில் சீன நிதி அமைச்சருடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. மேலும், வொஷிங்டன் சென்றுள்ள நமது இராஜாங்க அமைச்சர், இந்தியாவில் உள்ள குழுக்களுடன் கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து ஆராய்ந்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கடன் சுமையை குறைப்பது குறித்து முதன்முறையாக, சர்வதேச நாணய நிதியம், சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் ஆரம்பக் கட்டப் பேச்சுக்களை நடத்தினோம். இந்தக் கடனை அடைப்பது எங்களுக்கு கடினமானது. ஆனால் கடன் சுமையை குறைக்க வழி தேட வேண்டும். கடன் மட்டுமன்றி, தற்போது வட்டியைக்கூட கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகள் முறையாக முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டால், இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் என்று நான் நம்புகின்றேன்.

சில தனியார் கடன் வழங்குநர்களுடன் சலுகைகளைப் பெறுவது குறித்தும் ஆராய்ந்துள்ளோம்.







**பேச வேண்டியவற்றை பாராளுமன்றத்தில் பேசுவோம். அதற்குத்தான் பாராளுமன்றம் இருக்கிறது. நாம் அனைவரும் உணவு பாதுகாப்புத் திட்டத்துடன் கைக்கோர்ப்போம்!**

அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும் என்று நம்புகின்றேன். பேச்சுவார்த்தை முடிந்ததும் அந்த நாடுகளிடம் கடனுதவி கோரலாம். என்றாலும் ஒரேயடியாக இந்தக் கடனுதவி கிடைக்காது.

அதற்காகவே நாம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றோம். உலக வங்கி, ஐரோப்பா, அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் இருந்து உரம் மற்றும் மருந்துகளைப் பெற எங்களுக்குப் பணம் கிடைத்துள்ளது. அந்தப் பணத்தில்தான் இந்தப் பணிகளைச் செய்து வருகிறோம். அதனால் எந்த பிரச்சினையும் இன்றி இந்த வேலையைத் தொடரலாம்.

விவாதம் செய்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. வீதியில் இறங்கி இரத்தம் சிந்தப் போவதாக சிலர் கூறியுள்ளனர். இரத்தம் சிந்துவதற்கு முன் வாழ வேண்டும் மக்களுக்கு உணவு வழங்கும் முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் இரத்தம் சிந்துவதற்கு அன்றி பட்டினியால் சாகவே நேரிடும். பேசவேண்டியவற்றை பாராளுமன்றத்தில் பேசுவோம். அதற்குத் தான் பாராளுமன்றம் இருக்கிறது. நாம் அனைவரும் உணவு பாதுகாப்புத் திட்டத்துடன் கைக் கோர்ப்போம்.

ஆளுங்கட்சியில் இருந்து மாத்திரமல்ல, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவொன்றும் உணவு பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து பணியாற்ற விரும்புவதாக தெரிவித்தார்கள், தமக்கு ஒரு பிரதேச செயலகத்தை வழங்குமாறு என்னிடம் கேட்டனர். நாம் அந்தப் பணிகளை மேற்கொள்வோம்.

எவருக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இந்தப் பணிகளை முன்னெடுப்போம். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் பெரும்போகத்துடன் உணவுப் பாதுகாப்புத் திட்டம் முடிவடையாது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலக உணவு நெருக்கடிக்கும் நாம் தயாராக வேண்டும். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த போகங்களின்போது உரம் கிடைக்காதது தொடர்பில் விவசாயிகள் அனைவருக்கும் எங்களது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

**விவசாயிகள் முன்வைத்த கேள்வி களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வழங்கிய பதில்கள்:**

***கேள்வி: ஜனாதிபதி அவர்களே! பசளைப் பிரச்சினைதான் எமக்கு இருக்கிறது.***

***பதில்:*** இந்தப் போகத்தில் நெற்பயிர்ச்செய்கைக்கும், சோளப் பயிர்ச்செய்கைக்கும் தேவையான உரத்தை வழங்குகிறோம். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை உரிய நேரத்தில் தொடங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***கேள்வி: எமது விவசாய நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைப்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.***

***பதில்:*** இப்பகுதிகளுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடிவு செய்துள்ளோம். இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான எரிபொருளை வழங்கி வருகிறோம், மேலும் அறுவடையை சேகரிக்கும்போது இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருளையும் வழங்குவோம். விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருள் என்பன உரிய நேரத்தில் கிடைக்கிறதா என்பதை இந்தப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகள் தேடிப்பார்க்க வேண்டும்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், இராஜாங்க அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ஷ, ஜகத் புஷ்பகுமார, பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் கயாஷான் நவநந்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமேதா ஜி. ஜயசேன, முன்னாள் பிரதி சபாநாயகர் ஆனந்து குமாரசிறி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, தேசிய உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட மற்றும் பிரதேச அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 18 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



அரசியல் நிகழ்ச்சி நிரல்களற்ற விதத்தில்

# உணவு நெருக்கடியை சமாளிக்க அரசியல் வேறுபாடுகளின்றி கைகோர்க்க வேண்டும்

## குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மாரின் வாழ்வைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும்

**– பிரதமர் தினேஷ் குணவர்த்தன**



அரசியல் நிகழ்ச்சி நிரல்களற்ற விதத்தில், கிராமத்தின் அதிகாரத்தை, நாட்டின் பொருளாதார நிர்வாகமாக மாற்றியமைத்தல் வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட தேசிய உணவுப் பாதுகாப்பு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் (17) களுத்துறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே பிரதமர் இதனை வலியுறுத்தினார்.

நாம் தற்போது கடுமையான நிதி நெருக்கடியிலும், அந்நியச் செலாவணி நெருக்கடியிலும் சிக்கித் தவிப்பதால், இந்த நெருக்கடியைச் சமாளிக்க அரசியல் வேறுபாடுகளின்றி அனைவரும் கைகோர்க்க வேண்டுமென பிரதமர் கேட்டுக் கொண்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்;

ஒரு நாடு என்ற ரீதியில், விவசாயத் துறையில் மிகையைப் பேணிச் செல்லுதல் வேண்டும். மறுபுறம் பெருந்தோட்டக் கைத்தொழில் எமது ஏற்றுமதியை அதிகரிக்கும் ஒரு முக்கிய துறையாகும். நாம் மறைப்பதற்கு எதுவும் இல்லை. அதிலிருந்து மீளுவதற்கு நாம் ஒன்றிணைந்து, முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

கிராம சேவை பிரிவுகள் முதல் பிரதேச செயலகம் வரை, மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டம் என அனைவரும் உணவு பாதுகாப்பு செயற்பாட்டில் பங்குகொள்ளக்கூடிய ஒரு வேலைத்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளை ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை முன்னுரிமை செயற்பாடாகக் கருதுகிறோம். இந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், பசளைகள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களஞ்சியப்படுத்தல்

06

பொதுத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில்

# ஜனாதிபதி ரணிலுக்கும் பசிலுக்குமிடையே முக்கிய பேச்சு

*அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு*

**லோரன்ஸ் செல்வநாயகம்**





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்குமிடையில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று தொலைபேசியூடாக இடம் பெற்றுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் கூட்டணி அமைப்பது எவ்வாறு என்பது தொடர்பில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையாக இது அமைந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலுக்கான வேட்பு மனுவின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றும் அதன் தலைவரை விமர்சிப்பதை தவிர்ப்பது, கட்சியை விட்டு எவரும் பொது ஜன பெரமுனவில் வேட்பு மனு பெற்றுக் கொள்வதை தவிர்ப்பது, பொது ஜன பெரமுனவை விமர்சித்து ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பு மனுவை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோருக்கு வேட்பு மனுவை வழங்காதிருப்பது போன்ற தீர்மானங்கள் இதன் போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்தால் அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வேட்புமனு வழங்குவது கட்சிகளுக்கு வழங்கப்பட்ட கோட்டாவின் அடிப்படையில் மட்டுமானதாக இருக்க வேண்டும் என்றும் இதன் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி மாகும்புற போக்குவரத்து மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகத்துறை மற்றும்போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன வெள்ளைப் பிரம்புகளை கையளித்து பார்வை இழந்தவர்களுடன் உரையாடிய போது.

# இலங்கையின் முயற்சிகளுக்கு பரிஸ் கிளப் பூரண ஆதரவு

**கடன் நெருக்கடிகளுக்கும் உதவும் - ஷெஹான்**



கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணும் இலங்கையின் முயற்சிகளுக்கு பரிஸ் கிளப் தனது பூரண ஆதரவை உறுதியளித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸை சந்தித்த பின்னர், சந்திப்பு தொடர்பில் செய்துள்ள டுவிட்டர் பதிவிலேயே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வொஷிங்டன் விஜயம் செய்துள்ள இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, அங்கு பல்வேறு இராஜதந்திரிகளையும் சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

அதனடிப்படையில் பரிஸ் கிளப் இணை தலைவருடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர்,

06

# மத வழிபாட்டு தலங்களுக்கு மின்சார மானியம் கிடைக்கும்

**அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் அவசியம்**



மத வழிபாட்டுத் தலங்களுக்கு மின்சாரச் சலுகைகள் வழங்கப்படுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்த கருத்தை மறுத்துள்ள, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, ஆணைக்குழுவால் அந்தத் தீர்மானத்தை எடுக்க முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

மத வழிபாட்டுத் தலங்களின் மின் கட்டணத்துக்கு மானியம் வழங்கப்படுமாயின் அது ஆணைக்குழுவின் அனுசரணையா? அல்லது தலைவரின் அனுசரணையா? என்பதை வெளிப்படுத்த வேண்டுமென்றும் மானியம் வழங்கினால், அதை எப்படி ஈடுகட்டுவது என்பது குறித்தும் ஒரு வேலைத்திட்டம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், மத வழிபாட்டுத் தலங்களுக்கு மானியம் வழங்கப்படுமானால், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடமிருந்து உரிய விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

மோசமான வானிலையால் பாதிப்பு

# உடனடி நிவாரணம் வழங்க அமைச்சர் பிரசன்ன பணிப்பு

## வெள்ளம் வடிந்த பின் பரவும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த விசேட செயற்திட்டம்



கம்பஹா மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படாமல் தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கம்பஹா மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெள்ளம் குறைந்தவுடன் மாவட்டத்திலுள்ள அனைத்து கால்வாய்கள், ஆறுகள் மற்றும் நீர்வழிப் பாதைகளை சுத்தப்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டும் என்றும், அதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை அரசுடன் ஆலோசிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட கம்பஹா மாவட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் (16) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் கம்பஹா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சத்தியானந்தா தலைமையில் கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அண்மைய நாட்களில் பெய்து வரும் கடும் மழையினால் கம்பஹா மாவட்டத்தில் 11,158 குடும்பங்களைச் சேர்ந்த

06

# தாமரைக் கோபுரத்தை பார்வையிடும் நேரம் நீடிப்பு

**புதிய நேர அட்டவணை வெளியிட்டு வைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தாமரைக் கோபுரம் மக்கள் பார்வைக்காக திறக்கப்படும் நேரங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை அதனை பார்வையிடுவதற்கான பிரவேசப் பத்திரம் விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி

காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை அதனை பார்வையிட முடியும்.

அதேவேளை, சனி ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை பிரவேசப் பத்திர விநியோகம் இடம்பெறுவதுடன் இரவு 11 மணி வரை அதனை பார்வையிட முடியும்.

அத்துடன் தாமரைக் கோபுரத்தை பார்வையிட வருபவர்கள் இடைத்தரகர்கள் எவரையும் தொடர்பு கொள்ள வேண்டாம் என அந்த நிறுவனம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

சுற்றுலா வருபவர்கள் தமக்கான பிரவேசப் பத்திரத்தை நேர காலத்துடன் ஒதுக்கிக் கொள்ள முடியும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்ட நிவாரண முன்னெடுப்பு

# தேவைக்கேற்ப QR முறைக்கு அப்பால் எரிபொருள் விநியோகம்



சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்குடன் QR முறைக்கப்பால் எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்ட செயலாளர் இதனை குறிப்பிட்டுள்ளார்.


வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

06

# நாவலப்பிட்டியில் கைதான 15 பேரும் பிணையில் விடுதலை

**வழக்கு விசாரணை டிசம்பர் 13 ஆம் திகதி**

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாவலப்பிட்டி நகரில் (16) ஆர்ப்பாட்டம் செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்ஜீவ உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமான சரீர பிணையில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் தலைமையில்

06

வவுனியாவில் குளவி கொட்டு தாக்குதல்

# 32 மாணவர்கள், 08 ஆசிரியர்கள் வைத்தியசாலையில் அனுமதி

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா, போகஸ்வெவ மகா வித்தியாலய பாடசாலையில் குளவி கொட்டுக்கு இலக்காகி 32 மாணவர்களும் 08 ஆசிரியர்களும் வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள கோட்டக்கல்வி பிரிவுக்குட்ப போகஸ்வெவ மகா வித்தியாலயத்தில் நேற்று (17) காலை பிரார்த்தனையின் போது காற்றின் காரணமாக மரம் ஒன்றில் காணப்பட்ட குளவிக்கூடு கலைந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர் மீது குளவிகள் தாக்கியுள்ளன.

இதனால் பாதிப்படைந்தவர்களில் 12 மாணவர்கள் பதவிய பிரதேச வைத்தியசாலையிலும், 08 ஆசிரியர்கள், 12 மாணவர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும், 03 மாணவர்கள் மடுகந்த பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

டீசல் விலை குறைக்கப்பட்டாலும்

# பஸ் கட்டணங்களை குறைக்க முடியாது

*போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர்*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

டீசல் விலை குறைவடைந்தாலும் பஸ் கட்டணங்களை குறைக்க முடியாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிராண்டா தெரிவிக்கையில்:

டீசல் லீற்றர் ஒன்றின் விலையை நூற்றுக்கு 04 வீதம் அல்லது அதைவிட அதிகமானளவு குறைக்கப்பட்டால் மாத்திரமே பஸ் கட்டணங்களை குறைக்க முடியும். எனினும் 430 ரூபா விலையில் விற்பனை செய்யப்பட்ட டீசல் லீட்டர் ஒன்றின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால் எந்த வகையிலும் பஸ் கட்டணங்களை குறைக்க முடியாது.

அவ்வாறு பஸ் கட்டணங்கள் குறைவடைய வேண்டுமானால் டீசலின் விலை நூற்றுக்கு நான்கு வீதத்துக்கும் அதிகமாக குறைவடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று

பொருள் என்னும் அணையா விளக்கு மட்டும் கையில் இருந்துவிட்டால் நினைத்த இடத்துக்குச் சென்று இருள் என்னும் துன்பத்தைத் துரத்தி விட முடிகிறது.

# உயர்கல்விக்கு சாபக்கேடாக அமைந்துள்ள பகிடிவதை!

பல்கலைக்கழகம் என்பது உயர்கல்வி வழங்கும் நிறுவனமாகும். அந்த வகையில் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அறிமுகப்படுத்திய இலவசக்கல்வி நடைமுறையில் இருக்கும் இந்நாட்டில், 5 வயது முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் கல்வியைப் பெற்றுக் கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி மாத்திரமல்லாமல் உயர்கல்வியும் இங்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றது. அந்த அடிப்படையில் இந்நாட்டின் எதிர்கால சமுதாயத்தினருக்கு உயர்கல்வி வழங்கும் பணியில் 25 பல்கலைக்கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பல்கலைக்கழகங்களுக்கு வருடா வருடம் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர்.

அரச பல்கலைக்கழகங்களில் காணப்படும் பகிடிவதை பல மாணவர்களின் உயர்கல்விக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உண்மையாகும். அதன் காரணத்தினால்தான் இந்நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான வன்முறைகளைத் தடை செய்யும் சட்டத்தின் கீழ், பகிடிவதை ஒரு குற்றச் செயல் என 1997 முதல் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது.

அப்படியிருந்தும், அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை இடம்பெறுவதை றுஹுணு பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கை நல்ல எடுத்துக்காட்டாகும்.

உயர்கல்வி பெறவென பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்கும் புதிய மாணவர்களுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்வதையும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதையும் நோக்காகக் கொண்டு இரண்டாம் வருட மாணவர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாக ஆரம்பத்தில் பகிடிவதை பல்கலைக்கழகங்களில் அறிமுகமாகியுள்ளது. ஆனால் இப்பகிடிவதை இன்றைய காலகட்டத்தில் புதிய மாணவர்களை உடல், உள ரீதியில் கடும் இம்சைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கும் ஒரு செயற்பாடாக அமைந்திருக்கின்றது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வரை பல்வேறு சிரமங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து கற்று பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் மாணவர்களில் பெரும்பாலனோர் பகிடிவதையை பொறுத்துக் கொண்டு உயர்கல்வியை பெற்றுக்கொள்ளவே விரும்புகின்றனர்.

இப்பகிடிவதையின் குரூரம், இம்சிப்பு காரணமாக அதிலிருந்து தப்பிப்பதற்காக பலவித முயற்சிகளை மேற்கொள்ளும் பட்டதாரி மாணவர்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்களில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களும் உள்ளனர். அதன் விளைவாக சில மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் ஊனமடைந்தவர்களாக இருக்கின்றனர். இன்னும் சில மாணவர்கள் உயர்கல்விக்கே முழுக்கு போட்டு விடக்கூடியவர்களாக உள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்ற போர்வையில் தமது பிள்ளைகள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள், இம்சைகள் குறித்து பெரும்பாலான பெற்றோரும் பாதுகாவலரும் கவலை கொண்டுள்ளனர். இந்த நிலையில் நாடெங்கிலும் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்டுள்ள புதிய ஆய்வொன்றில், கடந்த 15 வருடங்களில் 9,834 பட்டதாரி மாணவர்கள் பகிடிவதை காரணமாக தமது பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம், பகிடிவதை என்ற போர்வையில் 9,903 மாணவிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. அத்தோடு இப்பகிடிவதை காரணமாக இற்றைவரையும் 195 பேர் பட்டதாரி மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர் அல்லது வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக இருக்கின்றனர்' என்று அந்த புதிய ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டி, குருநாகல் மாவட்ட பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் ஆர்.ஏ.எம். ஜயசிங்க பண்டார தெரிவித்திருக்கின்றார்.

இவை இவ்வாறிருக்க, அரச பல்கலைக்கழகங்களில் மிக மோசமான பகிடிவதைக்கு உள்ளான 5,806 மாணவர்கள் நாட்டிலுள்ள தனியார் பல்லைக்கழகங்களில் ஏற்கனவே உயர்கல்விக்காக பெற்றோரால் சேர்க்கப்பட்டுள்ளனர். தனியார் பல்கலைக்கழங்களில் பகிடிவதைக்கு இடமளிக்கப்படாமையே இதற்கான காரணமாகும். அதனால் பகிடிவதையின் விளைவாக பல்கலைக்கழகங்களின் நற்பெயருக்கு ஏற்பட்டுவரும் களங்கமும், மாணவர்கள் உயர்கல்வியை இடைநடுவில் கைவிடுவதும் தனியார் பல்கலைக்கழகங்களை நோக்கி மாணவர்கள் செல்வதும் அரச பல்கலைக்கழகங்களுக்கு நல்லதல்ல.

இது அரச பல்கலைக்கழகங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் பிழையான பார்வையை ஏற்படுத்த வழிவகுப்பதோடு உயர்கல்வியைப் பெற எதிர்பார்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி விடலாம். இந்நிலையில்தான் பகிடிவதை முற்றாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை பெற்றோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கொண்டிருக்கின்றனர்.

அதனால் பகிடிவதையை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கம் பரவலாகக் காணப்படுகின்றது. அதேநேரம் புதிய மாணவர்கள் என்றாலும் அவர்களும் எம்மைப் போன்று உடல், உள ரீதியிலான உணர்வுகளைக் கொண்டவர்கள் என்பதை பழைய பட்டதாரி மாணவர்களும் கருத்தில் கொள்வது நல்லது. அத்தோடு அவர்கள் பகிடிவதையில் ஈடுபடுவதில் இருந்து தவிர்ந்து கொள்ள முன்வருவதும் அவசியம். அப்போது பகிடிவதையால் ஏற்பட்டு வருகின்ற தாக்கங்களையும் பாதிப்புகளையும் முற்றாகத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# சாகித்திய ரத்னா விருதுக்கு தெரிவான இலக்கியவாதி டொக்டர் ஞானசேகரன்

கொழும்புத் தமிழ்சங்கத்தின் துணைத் தலைவரும், 'ஞானம்' சஞ்சிகையின் ஆசிரியருமான மூத்த இலக்கியவாதி மருத்துவ கலாநிதி தியாகராசா ஐயர் ஞானசேகரன் இந்த ஆண்டுக்கான 'சாகித்திய ரத்னா' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ஈழத்து மற்றும் உலகத்து தமிழ் இலக்கிய உலகுக்கு நன்கு அறிமுகமான டொக்டர் ஞானசேகரன் 24 நூல்களின் ஆசிரியராவார். இந்த 24 நூல்களில் ஐந்து நாவல்களும், மூன்று சிறுகதைத் தொகுப்புகளும் அடங்குகின்றன.

2000 ஆம் ஆண்டில் தனது மனைவியின் பெயரிலும் தனது பெயரிலும் 'ஞானம்' என்ற சிற்றிதழை அவர் தொடங்கினார். அந்த சிற்றிதழ் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த 'ஞானம்' இதழ்களை ஆய்வு செய்து தஞ்சை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவி ரேணுகாதேவி முனைவர் பட்டத்தைப் பெற்று இருக்கிறார் என்பது ஈழத்து இலக்கிய உலகிற்கு குறிப்பாகச் சிற்றிதழ் உலகுக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும்.

இவரது 'அல்சேசனும் ஒரு பூனைக்குட்டியும்' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கடந்த இருபத்திரண்டு வருடங்களாகத் தமிழ்ப்பாட மாணவர்களுக்கு பாடநூலாக இருக்கிறது.

ஒரு சிறுகதைத்தொகுதி இத்தனை ஆண்டுகள் பல்கலைக்கழகப் பாடநூலாக இருப்பது இதுதான் முதல் தடவையாகும். அத்துடன் இவரது 'குருதிமலை' நாவல் மதுரை அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைமாணி மாணவர்களுக்கான பாடநூலாக 1992/93 காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. இவரது 'எரிமலை' நாவல் ஆங்கில, சிங்கள மொழிகளிலும் 'குருதிமலை' சிங்கள மொழியிலும் 'பரதேசி' சிறுகதைத் தொகுதி சிங்கள மொழியிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன.

1977 இல் 'புதிய சுவடுகள்' நாவலுக்கான தேசிய சாகித்திய மண்டலப்பரிசினைப் பெற்றவர் மீண்டும் 1980 இல் 'குருதிமலை' நாவலுக்காக அவ்விருதைப் பெற்றுக் கொண்டார். 1994 இல் 'லயத்துச் சிறைகள்' நாவலுக்காக மத்திய மாகாண சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர், மீண்டும் 1996 இல் அதே பரிசினை 'கவ்வாத்து' நாவலுக்குப் பெற்றுக் கொண்டவர். கொழும்பு கம்பன் கழகம் 2012 இல் இவருக்கு மகா வித்துவான் சி. கணேசய்யர் விருதினை வழங்கியது. இந்த வரிசையில் 'எரிமலை' நாவலுக்காக 2018 இல் கொடகே தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக் கொண்டவர். உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் இவருக்கு 2005 இல் தமிழ்த்தாய் அறக்கட்டளை விருதினை வழங்கியது. தமிழ்நாடு உயிர்மை சுஜாதா அறக்கட்டளை 2013 இல் சிறந்த சிற்றிதழ் விருதினை இவருக்கு வழங்கியது. பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பல்கலைகக்கழகங்களிலும் பல்வேறு இலக்கிய மாநாடுகளில் கலந்து உரையாற்றிய கலாபூஷணம் ஞானசேகரன் எண்பது வயது தாண்டியும் பல்வேறு அமைப்புகளிலும் சேர்ந்து இளமைத் துடிப்போடு இயக்கும் இலக்கியர் ஆவார்.

—காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# நாட்டின் பல இடங்களிலும் பிரபல்யமடைந்து வரும் மாற்றுமோதிரம், மணப்பெண் அலங்காரக் கண்காட்சி

## தினகரன், வாரமஞ்சரி, வசந்தம் FM, வசந்தம் TV ஊடக அனுசரணை

அருந்ததி என்ற பெயரிலான நிறுவனம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 'மாற்றுமோதிரம்' என்ற நிகழ்வையும், மணப்பெண் அலங்காரக் கண்காட்சியையும் நடத்தி வருகின்றது. தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகள், வசந்தம் எஃப். எம், வசந்தம் தொலைக்காட்சி ஆகியன இதற்கான ஊடக அனுசரணையை வழங்கி வருகின்றன.



இதுபோன்றதொரு நிகழ்வை அருந்ததி நிறுவனம் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பில் மிகப் பிரமாண்டமாக நடத்தியிருந்தது. மட்டக்களப்பு அஞ்சனா கிராண்ட் பலஸ் ஹோட்டலில்அருந்ததி நிறுவனத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

## மட்டக்களப்பில் நடைபெற்ற கோலாகலமான வைபவம்

'மாற்றுமோதிரம்' கண்காட்சிக்கு பிரதம அதிதிகளாக புரவலர் காசிம் உமர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கௌரவ அதிதிகளாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன், இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பாராளுமன்ற செயலாளர் ரீ.ஈஸ்வரராஜா, புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார், அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அருந்ததி நிறுவனமானது திருமண சேவை மற்றும் மணப்பெண் அலங்காரக் கலைகளை நடத்தி வருகின்ற பிரபல்யமான நிறுவனமென்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் நடத்துகின்ற நிகழ்வுகளில் அந்தந்தப் பிரதேச முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு தங்களது ஆதரவை வழங்கி வருகின்றனர். இன்றைய நவீன உலகைப் பொறுத்த வரை மணப்பெண் அலங்காரமென்பது பிரதானமான கலையாக மாத்திரமன்றி, பெண்கள் பலருக்கு தொழில்வாய்ப்பையும் வழங்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் இத்துறை சார்ந்தவர்கள் அருந்ததி நிறுவனத்திடம் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பில் இத்தகைய பிரமாண்டமான நிகழ்ச்சி நடத்தப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. அங்கு கேக் கண்காட்சி, மணப்பெண் அலங்காரக் கண்காட்சி, திருமண சேவை, கொட்டுமேளக் காட்சி, மாற்றுமோதிர காட்சிகள் மேடையேற்றப்பட்டதுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் 'அருந்ததி' பத்திரிகை அறிமுகமும் இடம்பெற்றிருந்தது.



அந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்திலுள்ள கேக், மணப்பெண், உள்ளிட்ட வடிவமைப்பாளர்கள் பங்கு கொண்டனர். அவர்களது மேற்படி தொழில் ரீதியான ஆலோசனைகள், அதுதொடர்பான வியாபார யுக்திகள் அங்கு பரிமாறிக் கொள்ளப்பட்டன. வியாபாரத்திற்குரிய வர்த்தக இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

கேக் வடிவமைப்பாளர்கள், அழகுக்கலை நிபுணர்களது திறமைகளை பாராட்டி உயரிய விருதுகள், நினைவுச்சின்னங்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் என்பன அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு அனுசரணையாளர்களாகவும், அதிதிகளாகவும் கலந்து கொண்டவர்களை நிகழ்வின் ஏற்பாட்டாளரான கந்தசாமி கருணாகரன் மற்றும் அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.





# T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆசிய சிங்கங்களை உற்சாகமூட்டும் பிரசாரத்தை ஆரம்பித்துள்ள டயலொக்

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை ஆகியன இணைந்து ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 13 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள T20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஆசிய T20 கிரிக்கெட் சிங்கங்களான இலங்கை அணியினர் உலகக்கிண்ண மகுடத்தை சூடுவதற்கான உற்சாகமூட்டல் வாழ்த்து பிரசார முன்னெடுப்பொன்றை ஆரம்பித்துள்ளன.

2022 ஆசிய T20 கிண்ண இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக மகத்தான வெற்றியைப் பெற்று, ஆறாவது மகுடத்தை சூடியுள்ள அதேவேளை, உலக கிரிக்கெட்டில் முன்னணி அணிகளுக்கு எதிராக போட்டியிட்டு உலக கிண்ணத்தை வெற்றியீட்டுவதை உறுதி செய்வதற்கான முனைப்பில் இலங்கை அணியினர் தயாராகியுள்ளனர்.

அதற்கமைய எமது அணியினர் உலகக்கிண்ணத்தை வெற்றி கொள்ள அவர்களை வாழ்த்த விரும்புவோர் அதற்குரிய 'போர்ட்டல்'(Portal) இனை QR குறியீடு மற்றும்/அல்லது இணையதளம் மூலம் அணுகலாம். நீண்ட எட்டு வருடங்களின் பின்னர் தேசிய கிரிக்கெட் அணி T 20 உலகக் கிண்ணத்தை வென்று கிண்ணம் சகிதம் தாய்நாட்டிற்கு வரவேண்டும் என்ற ஆவலில் உள்ள ரசிகர்கள் இலங்கை அணியினரை உற்சாகப்படுத்தி வாழ்த்துவதற்காகவே இந்த இணைய அணுகல் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே , நீங்கள் வாழ்த்துவதற்கான போர்ட்டலை அணுகுவதற்கு மிக இலகுவாக dlg.lk/apekollo ஐ பார்வையிடலாம். தேசிய கிரிக்கெட் அணியினரை இதனூடே வாழ்த்துவது மட்டுமன்றி, டயலொக் வழங்கும் உற்சாகமான கிரிக்கெட் நினைவுச் சின்னங்களை வெல்லும் வாய்ப்பினையும் ரசிகர்கள் பெறுகின்றனர். சர்வதேச கிரிக்கெட்டின் இலங்கை கிரிக்கெட்டுக்கான உப தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச கருத்து தெரிவிக்கையில் "கிரிக்கெட் விளையாட்டிற்கு ஆதரவளித்து சுமார் ஒரு தசாப்த காலமாக எமது இளம் திறமைகளை நம்பியதற்காக தேசிய அணியின் அனுசரணையாளரான டயலொக் ஆசிஆட்டாவிற்கு நான் உண்மையில் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார். "

"நடைபெறவுள்ள T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் எங்கள் சிங்கங்களை உற்சாகப்படுத்துவதற்காக அனைத்து இலங்கை இதயங்களையும் ஒன்றாக இணைக்கும் இந்த முயற்சியின் ஒரு பகுதியாக திகழ்வதையிட்டு டயலொக் உண்மையிலேயே கௌரவமும் பெருமையும் அடைகிறது. வெற்றியை நோக்கிய இலங்கை அணியின் இந்த அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் வெற்றிகரமானதாக அமைவதற்கு மனப்பூர்வமாக நான் வாழ்த்துகின்றேன்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும சந்தைப்படுத்தல், வர்த்தக நாமம் மற்றும் ஊடக பிரிவின் உப தலைவரான ஹர்ஷ சமரநாயக்க அவர்கள் தெரிவித்தார். டயலொக் ஆசிஆட்டா நிறுவனம் இலங்கை தேசிய கிரிக்கெட், தேசிய கரப்பந்து மற்றும் வலைப்பந்து அணிகளுக்கு உத்தியோகபூர்வ அனுசரணை வழங்குவதுடன், ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து போட்டிகள், தேசிய ஜூனியர் மற்றும் சிரேஷ்ட வலைப்பந்து போட்டிகள், பாடசாலை ரக்பி லீக், நொக்கவுட் என்ட் செவன்ஸ் போட்டித்தொடர், பிரீமியர் கால்பந்து மற்றும் பராலிம்பிக் விளையாட்டுகள், இராணுவ பரா விளையாட்டு போட்டிகள், தேசிய பரா விளையாட்டு போட்டிகள், உலக பராலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்கின்ற இலங்கை பரா அணி ஆகியனவற்றிற்கும் அனுசரணை வழங்கி வருகின்றது.



சர்வதேச கிரிக்கட்டுக்கான இலங்கை கிரிக்கட் உப தலைவர் கலாநிதி ஜயந்த தரமதாச (இடமிருந்து வலம்) இலங்கை கிரிக்கட்டின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் உபுல் பண்டார நவரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் வர்த்தக நாமம் மற்றும் ஊடக பிரிவு உப தலைவர் ஹர்ஷ சமரநாயக்க, இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் மோகன் டி சில்வா ஆகியோரின் முன்னிலையில் SLC வளாகத்தில் T20 உலகக் கிண்ண வாழ்த்து தளத்தை ஆரம்பித்து வைத்த போது எடுத்த படம்.



# ஜெபமும் விடாமுயற்சியும் இரண்டு கண்கள் போன்றவை

கிறிஸ்தவ வாழ்வை செபம், விடா முயற்சி என்ற இரு ஆயுதங்களால் மட்டுமே வெற்றிகொள்ளமுடியும். அதனையே கடந்த ஞாயிறு வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

செபம் என்பது மனித உறவை வளர்க்கும் ஓர் உன்னதமான கலை. இறைவன் முன்னிலையில் வாழ்வின் அர்த்தத்தைத் தேடுவதே செபம். இறைமனித உறவில் நிலைத்திருக்கச் செபமும் விடாமுயற்சியும் இரண்டு கண்கள் போன்றது. இறைவனின் துணையில்லாமல் நமது முயற்சி மட்டும் ஒரு போதும் பயனளிக்காது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வாசகம் (விப. 17:813) செபத்தின் வல்லமைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. இஸ்ரயேல் மக்கள் அமலேக்கியரோடு யோசுவா தலைமையில் போர் புரிந்தனர். மோசே கடவுளின் கோலை கையில் பிடித்தவாறு தன் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரயேல் மக்களுக்கு வெற்றி கிடைத்தது.

கையைத் தளர விட்டபோதெல்லாம் பகைவர்கள் வெற்றியடைந்தனர். இதனால் தளர்வுற்ற மோசேயின் கைகளை ஆரோன், கூர் இருவரும் தாங்கிப் பிடிக்க வெற்றி கிட்டியது. அதேபோல் நமது கைகளை உயர்த்திச் செபிக்க வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. தளர்ந்து போன கைகளைத் திடப்படுத்துங்கள். தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள் (எபி. 12:12).



நாம் மனந்தளராமல் செபிக்க வேண்டும் என்பதை நற்செய்தியில் நேர்மையற்ற வரும் கைம்பெண்ணும் என்ற உவமை வாயிலாக இயேசு உணர்த்துகிறார்.

நீதி கேட்டு நடுவரிடம் சென்ற கைம்பெண்ணை நடுவர் இழுத்தடிக்கிறார். ஆனால் கைம்பெண் விடாது நச்சரித்ததால் அவளுடைய தொல்லை தாங்க முடியாமல் அப்பெண்ணுக்கு நீதி வழங்குகிறார். நேர்மையற்ற நடுவரே தொல்லை தாங்காமல் நீதி வழங்கினாரென்றால் நீதியுள்ள, இரக்கமுள்ள கடவுள் தம்மிடம் இடைவிடாது மன்றாடுவோரின் மன்றாட்டை நிச்சயமாகக் கேட்பார் என்பது உறுதி.



இயேசு தனது பணி வாழ்வு முழுவதும் தந்தையோடு உள்ள செப உறவில் நிலைத்திருந்தார். விடியற்காலையில் கருக்கலோடு எழுந்து செபித்தார். மாலையானதும் தனிமையாய் மலைக்குச் சென்று செபித்தார் (லூக். 6:12).

ஒவ்வொரு நிகழ்ச்சியைத் தொடங்கு முன்பும் முழந்தாளிட்டும் கைகளை விரித்தும் கண்களை வான் நோக்கியும் முகம் குப்புற விழுந்தும் செபித்தார் என விவிலியம் கூறுகிறது. எனவேதான் இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள் என திருத்தூதர் பவுல் கூறுகின்றார்.(1 தெச. 5:17) என்று.

ஒரு துறவியிடம் சீடர்கள், “மிகப் பெரிய பாவம் எது?” என்று கேட்டார்கள். துறவி சிரித்துக் கொண்டே, “திருடுவது, பொய் சொல்வது, ஏமாற்றுவது அல்ல. மாறாக, கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டு செபிக்காமல் இருப்பதுதான் மிகப் பெரிய பாவம்? என்றார்.

மன்றாடுவது மட்டும் போதாது, மனம் தளராமல் தொடர்ந்து மன்றாட வேண்டும். எனவேதான் எமது நாட்டிற்கு ஆற்றும் முதல் தொண்டு நாட்டுக்காக செபிப்பது தான்.அதுவும் இடைவிடா செபத்தின் மூலம்தான் நாட்டை வெற்றிகரமாக வழி நடத்த முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் மன்னரான புனித 9ஆம் லூயி.

செபம் மனித வாழ்வை நிலைப்படுத்தி, பாதுகாப்பு உணர்வைத் தருகிறது. முயற்சிக்கு நல்ல முடிவினைத் தருகிறது. கடவுள் கொடுப்பதை மனிதர் தடுக்க முடியாது; கடவுள் தடுப்பதை மனிதர் கொடுக்க முடியாது. கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் இணைந்து செல்ல கடவுள் உதவி செய்வார். அதற்கான அருள் வேண்டி ஜெபிப்போம்.

அருட்பணி
முனைவர் ம.அருள் ...

# தோமஸ் குரே ஆண்டகையின் 34 வது நினைவுத் திருப்பலி

## பேராயர் தலைமையில் தேவத்தை–



அதிமேதகு கர்தினால் தோமஸ் குரே ஆண்டகை விண்ணகமடைந்த 34 ஆவது வருட நினைவை எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை கத்தோலிக்க திருச்சபை நினைவு கூறுகிறது. அதனையொட்டிய இரங்கல் திருப்பலி எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை ராகம தேவத்தை பசிலிக்கா திருத்தலத்தில் காலை 9.00 மணிக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

# இந்திகொல்ல புனித ஜூட் ஆலய திருவிழா

## இருபதாம் திகதி கொடியேற்றம்



இந்திகொல்ல புனித ஜுட் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் பக்தி பூர்வமாக கொண்டாடப்படவுள்ளது.திருவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளதுடன் அதனைத் தொடர்ந்து 28ஆம் திகதி வரை நவநாள் ஆராதனைகள் இடம் பெறவுள்ளன.அதனையடுத்து அக்டோபர் 29ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு ஜே.டி.அந்தனி ஆண்ட கையின் தலைமையில் வெஸ்பர்ஸ் ஆராதனையும் திவ்விய நற்கருணை பவனியும் இடம் பெறவுள்ளது.





அதனைத் தொடர்ந்து 30 ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.அன்றைய தினம் காலை 10:30 மணிக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திருப்பலி பூசை கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.




# தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலய திருவிழா









கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் இரண்டு நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க கத்தோலிக்க ஆலயமான தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 16ஆம் திகதி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது கடந்த 07 ஆம் திகதி பங்குத்தந்தை மொரிசன் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழா ஒன்பது தினங்கள் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று கடந்த சனிக்கிழமை மாலை புனிதரின் திருச்சொரூப பவனியும் அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

படங்கள்: கல்லடி குறூப் நிருபர்

# நீதி வழங்கும்போது கடவுள் தன்னை நோக்கி குரலெழுப்பும் அடியவரை கைவிடமாட்டார்

பொதுக் காலத்தின் 29ஆம் ஞாயிறை நாம் சிறப்பித்தோம். அன்றைய வாசகங்கள் நீதிக்கானப் போராட்டத்தில் இறை நம்பிக்கையுடன் தொடர்ந்து மனந்தளராமல் போராட வேண்டும் என்ற உயரிய கருத்தை முன்வைக்கின்றன.

நற்செய்தி வாசகமானது.”அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஓர் உவமை சொன்னார். “ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை; மக்களையும் மதிப்பதில்லை. அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய், ‘என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்’ என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். நடுவரோ, நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை. பின்பு அவர், ‘நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை; மக்களையும் மதிப்பதில்லை. என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையானால் இவர் என் உயிரை வாங்கிக் கொண்டேயிருப்பார்’ என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார்.” பின் ஆண்டவர் அவர்களிடம், “நேர்மையற்ற நடுவரே இப்படிச் சொன்னாரென்றால், தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.



இயேசு கூறும் இந்த உவமையில் நமது அன்றாட வாழ்வில் நீதிக்கான போராட்டத்தில் நாம் விடா முயற்சியுடன் துணித்து போராட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறார். அதிலும் குறிப்பாக நேர்மையற்ற இவ்வுலக நடுவர்களே பலநேரங்களில் நமக்கு நீதி வழங்கும்போது கடவுள் தன்னை நோக்கிக் குரலெழுப்பும் அவர்தம் அடியவரை கண்டுகொள்ளாமல் இருக்கமாட்டார். கைவிடவும் மாட்டார் என்று கூறுகின்றார் இயேசு.

அற்புத குழந்தை இயசு திருத்தலத்திற்கு முதல் வியாழன் திருப்பலி நிறைவேற்றுவதற்காகச் சென்றிருந்தேன். திருப்பலியின் இறுதியில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அது முடிந்ததும் பக்தர்கள் சாட்சி சொல்லும் நிகழ்வு நடைபெற்றது. பலர் வந்து சாட்சி சொல்லிவிட்டுப் போனார்கள். அப்போது பெண் ஒருவர் பச்சிளம் குழந்தை ஒன்றைக் கையில் ஏந்தியவாறு சாட்சி சொல்ல வந்தார். “நான் ஒரு கிறிஸ்தவ பெண் அல்ல. வேறு மதத்தை சேர்ந்தவள். எனக்குத் திருமணமாகி 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் எனக்குக் குழந்தைப் பேறு கிடைக்கவில்லை. இதனால் எனது வீட்டில் பல்வேறு பிரச்சனைகள் எழுந்தன. ஆனால், என் கணவர் மட்டும் என்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அதனால் துயரங்கள் மத்தியிலும் என் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தேன்.

ஒருநாள் கிறிஸ்தவ பெண் ஒருவரை நான் எதேச்சையாகச் சந்திக்க நேரிட்டது. அப்போது, குழந்தை பாக்கியமற்ற எனது நிலை பற்றி அவரிடம் எடுத்துக்கூறினேன். உடனே அவர், கோவைப் புதூரிலுள்ள குழந்தை இயேசு கோவிலுக்குப் போய் செபம் செய்யுங்கள். அற்புதக் குழந்தை இயேசு உங்கள் குறைகளைப் போக்கி உங்களுக்குக் குழந்தை வரம் அருள்வார். நம்பிக்கையோடு செல்லுங்கள் என்று என்னிடம் கூறினார்.

அப்போதிலிருந்து அற்புத குழந்தை இயேசு கோவிலுக்கு ஒவ்வொரு மாதமும் முதல் வியாழனன்று வரத் தொடங்கினேன். மூன்று ஆண்டுகளாக மனந்தளராமல் விடாமல் தொடர்ந்து வந்தேன். அற்புத குழந்தை இயேசுவே, என்னைப் பாருங்கள். எனக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைப் போக்குங்கள், நீங்களே என் வயிற்றில் ஒரு குழந்தையாகப் பிறந்திடுங்கள் என்ற கண்ணீர்விட்டு அழுது செபித்தேன்.

சரியாக மூன்று ஆண்டுகள் கழித்து இப்போது எனக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்துள்ளது. அற்புத குழந்தை இயேசுவே எனக்குக் குழந்தையாக வந்து பிறந்துள்ளார் என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

தமிழகத்தின் வேளாங்கண்ணியிலுள்ள புனித ஆரோக்கியமாதா ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் பலரிடம் நாம் பேசியிருக்கிறேன். அவர்களில் பலர், “ நான் பல ஆண்டுகளாக மாதா கோவிலுக்கு நடந்து போகிறேன், மாதா கண்டிப்பாக என் தேவையை நிறைவேற்றுவார்கள், அந்த நம்பிக்கையில்தான் நான் இத்தனை ஆண்டுகளாகப் பாதயாத்திரைப் போகின்றேன்” என்று ஆழமான நம்பிக்கையுடன் பேசியதைக் கேட்டிருக்கிறேன்.

அருட்பணி செல்வராஜ் சூசை மாணிக்கம்....

# "நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள்"

## உலக மறைபரப்பு தினம் 23ல்



பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர் அருட்பணி பசில் ரொஹான் பெர்னாண்டோ அடிகளாரின் செய்தி

கத்தோலிக்கத் திருச்சபையானது பிரதி ஆண்டும் அக்டோபர் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையை மறைபரப்பு ஞாயிறாக சிறப்பிக்கின்றது.

நற்செய்தியை அறிவிக்கும் பணியில் நமக்குள்ள பொறுப்பையும் கடமையையும் வாய்ப்பையும் பற்றி சிந்திப்பதற்கு இந்த நாள் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

" எங்கே இருவர் மூவர் என் நாமத்தினால் ஒன்று கூடி இருப்பீர்களோ அங்கே அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்." திருமுழுக்கின் மூலம் திருஅவையின் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம் இறை ஆசீரைப்பெற்று இறைவார்த்தைக்கேற்ப சாட்சியாக வாழ்ந்து, உலகிற்கு நற்செய்தியை பறைசாற்றி, நம் இதயங்களிலிருந்து எழும் புகழ்ச்சி செபங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இயேசுவுக்கு சாட்சியாக வாழ்தல் என்பதன் உண்மையான அர்த்தம் என்ன?

சாட்சியம் என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்வை கண்ணால் பார்த்து அதனை அங்கிருந்து அனுபவித்து அங்கு நடந்த அனைத்தையும் விளக்கிக் கூறக்கூடியதாக இருத்தலாகும்.

கத்தோலிக்கர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உண்மையுள்ள நற்செய்தியைப் பற்றி அறிந்ததையும் அனுபவித்ததையும் நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள் என்ற 2022 ம் ஆண்டு உலக மறைபரப்பு தினத்தின் கருப்பொருளுக்கமைய சாட்சி பகர அழைக்கப்படுகின்றோம்.

முத்திப்பேறு பெற்ற மாரி பொலின் ஜெரிகோட் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட விசுவாச வளர்ச்சி சங்கம் இவ்வருடம் 200வது யூபிலி விழாவைக் கொண்டாடுகின்றது.

முத்திப் பேறுபெற்ற மாரி பொலின் ஜெரிக்கோட் அவரகள் தூய நிலைக்கு உயர்த்தப்படவேண்டுமென மன்றாடும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இதுவே இவ்வருட உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தின் முக்கிய அம்சமாகும்.

இறைவனுக்கு சாட்சிபகர்தல் என்பதன் அர்த்தம் அவரது படிப்பினைகளை சிந்தித்து எம் வாழ்நாள் முழுவதும் அதனைப் பிரதிபலித்து வாழ்வதாகும். அதாவது, எமது சிந்தனை, செயற்பாடுகள், பேசும் வார்த்தைகள், நிகழ்வுகளைப் பார்க்கும் விதங்கள், அனைத்தும் கிறிஸ்துவை பிரதிபலிப்பனவாக இருக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுடன் உரையாடும் போது கிறிஸ்துவின் சாட்சிகளாக மாற்றம் பெறுகின்றோம். கிறிஸ்தவ ஆன்மீகம் நமபிக்கையில் பிணைக்கப்பட்டு, நம்பிக்கையின் விதைகளாய் செழித்து வளர்ந்து பலன் கொடுத்து அதனை மற்றவர்களின் நன்மைக்காக பயன்படுததும் போது அவை அர்ப்பணிப்பென இனம் காணப்படுகின்றது.

சாட்சியாக இருத்தல் என்பது ஒரு முக்கியமான மற்றும் அற்புதமான விடயங்களைப் பார்க்கும் ஒருவர் என்பதாகும். இவர் தான் பெற்றுக்கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்வதை சாட்சியம் எனலாம்.

சாட்சியம் என்பது சாதாரணமாக இருக்கலாம்.எனினும் அது ஒரு பெரிய பொறுப்பாகும்.

## பார்வையற்றோர் பிரச்சினைகளை தீர்க்க...

நேற்று (17) ஜனாதிபதி செயலகத்தில் கொடி அணிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலக செலவில் பார்வையற்றோருக்கு 300 வெள்ளை பிரம்புகளைக் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பார்வையற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பார்வையற்றோர் தேசிய சங்கத்தின் செயலாளர் பிரசன்ன விக்கிரமசிங்க, இந்த சங்கம் அனைத்து மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதேவேளை, பெண்களுக்கான மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஒரு கிளையாக பார்வையற்ற பெண்களின் சங்கமும் மாற்றுத்திறனையுடைய இளைஞர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இளைஞர் சங்கமும் இயங்கி வருவதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கை தேசிய பார்வையற்றோர் சங்கத்தின் தலைவர் கமல்சிறி நாணயக்கார மற்றும் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ...

மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்றைய தினம் திகதி மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது. அத்துடன் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான விவாதம் நடைபெறும்.

ஒக்டோபர் 19ஆம் திகதி மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை நீதி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட 06 சட்டமூலங்களை விவாதத்துக்கு எடுக்கவும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்தது. இதற்கமைய நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம், நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம், அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம், விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரையான நேரம் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை அரசியலமைப்புக்கான 22 ஆம் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது. அன்றைய தினம் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப 5.30 மணி வரை நடைபெறும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் முடிவுக்கு வந்ததும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

## 22 ஆவது அரசியலமைப்பில்...

கலைப்பதற்கான காலத்தை நான்கரை வருடங்களாக மாற்றிக்கொண்டுள்ளனர். ஆகையினால் நாங்கள் அந்த பரிந்துரையில் எவ்வித மாற்றங்களையும் செயற்படுத்த முயற்சிக்கவில்லை.

19 ஆவது திருத்தத்திலேயே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான காலம் நான்கரை வருடத்திலிருந்து இரண்டரை வருடமாக குறைக்கப்பட்டது. 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களே அதனை நான்கரை வருடங்களாக்கியுள்ளனர்.

பாராளுமன்றத்தை நான்கரை வருடத்தில் கலைப்பதற்கு அனைத்து எதிர்கட்சிளும் இணங்கியுள்ளன. அத்துடன், இரட்டை குடியுரிமை தொடர்பில் சட்ட ரீதியான தீர்வுகள் காணப்படுகின்றமையினால் அதனை நீக்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

22 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் மக்களுக்கே அதிக தேவையாக காணப்படுவதால் இதனை நாங்கள் நிறைவேற்றிக் கொள்வோம் என எதிர்பார்க்கின்றோம்.

19 ஆவது அரசியலமைப்பு திருதத்தின் உண்மை தன்மையை எடுத்துணர்த்திய போதே அதற்கு அதிகமானோர் வாக்களித்தனர்.

அதனை போன்றே இதற்கும் 150 பேர் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை காணப்படுகின்றதென அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

## எரிபொருள் விலைகள்...

சுப்பர் டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலைகளை குறைத்துள்ளைதயடுத்து இந்தியன் ஒயில் கம்பனி (IOC) நிறுவனமும் ஒக்டேய்ன் 92 ரக பெற்றோலின் விலையை 40 ரூபாவாலும் ஒட்டோ டீசல் லீட்டர் ஒன்றின் விலையை 15 ரூபா வாலும் குறைத்துள்ளது.

அதேவேளை கடந்த அக்டோபர் முதலாம் திகதி எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலை 40 ரூபாவாலும் ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலை 30 ரூபாவாலும் குறைக்கப்பட்டது.அந்த விலை குறைப்பிற்கிணங்க ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலை 410 ரூபவாகவும் ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலை 510 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

## மூன்று வயது...

தெரிவித்தார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த மேலும் இருவர் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் சதொச...

மே மாதம் 18ஆம் திகதி தாம் அனுப்பியிருந்ததாக சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் நேற்று (17) அறிவித்துள்ளார்.

அதற்கமைய, புதைகுழி அகழ்வுக்கு தேவையான நிதி, உதவி தேவைப்படும் திணைக்களங்கள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய, சதொச மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை எப்போது ஆரம்பிப்பது என்பதை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் நேற்று (17) உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்படும் பட்சத்தில், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் சார்பில் மன்றில் ஆஜராகிய சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மனித புதைகுழி அகழ்வுக்கான திகதியை நீதிமன்றத்துக்க அறிவிக்குமாறு உத்தரவிட்ட நீதவான் எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

## பிரியமாலிக்கு ரூ. 80 இலட்சம்...

திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரிடமிருந்து வாக்குமூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காணியொன்றை விற்று பெற்றுக் கொண்ட 80 இலட்சம் ரூபா பணத்தை அசாத் சாலி சந்தேக நபரான பெண்ணிடம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜானகி சிறிவர்த்தன என்ற பெயருடைய பெண் மூலம் அந்தப் பணம் சந்தேக நபரான பெண்ணுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கோடிக்கணக்கான நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளாரென்ற சந்தேகத்தின் பேரில் திலினி பிரியமாலி குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தினால் கடந்த ஐந்தாம் திகதி கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக தற்போது 11 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இந்த வருடம் ஆடம்பரமான...

உரையாற்றிய கர்தினால் ரஞ்சித், இவ்வருட கிறிஸ்துமஸ் பண்டிகை பசித்திருப்பவர்களுக்கு உணவளிப்பதாக மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றார். “நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த கிறிஸ்துமஸில் தேவாலயங்கள் மற்றும் பிற இடங்களை அலங்கரிப்பதற்காக பணத்தை வீணாக்கக்கூடாது. பசியில் வாடுபவர்கள் ஏராளம். எனவே, இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் சமயத்தில் ஏழைகளுக்கு உணவு வழங்குவது மட்டுமே செய்ய வேண்டும்,” என்றார்.



மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டி உற்பத்தி செய்வது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ருஹுணு பல்கலைக்கழகத்திற்கும் ஸ்ரீலங்கா மொபிலிட் தனியார் நிறுவனத்திற்குமிடையில் நேற்று கைச்சாத்திடப்பட்டது. ருஹுணு பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவும் ஸ்ரீலங்கா மொபிலிட் தனியார் நிறுவனத்தின் சார்பில் ரிப்கான் சித்திக் ஆகியோரும் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

## 2,07,000 ...

வழங்குவதற்காக 7 ஆயிரம் பில்லியனுக்கும் அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. விவசாயிகளின் நலன் கருதி மேலும் பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும் போக நெற்செய்கையினை கருத்திற் கொண்டு நாடளாவிய ரீதியில் உள்ள இரண்டு லட்சத்து 7ஆயிரத்து 103 விவசாயிகளுக்கு இந்த கடன் வழங்கப்படவுள்ளது. அதற்காக 7,124 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் குறைவடைந்துள்ள விவசாய பயிர்ச்செய்கைகளை முன்னேற்றும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.



ஆசிரியர் தினத்தை ஒட்டி கொழும்பு பிளஸா ஸ்டார் லயன்ஸ் கழகத்தால் கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

## தனுஷ்கோடியில் தஞ்சம்...

தனுஷ்கோடிக்கு அடுத்த முதலாம் மணல் திட்டில் சென்று இறங்கியுள்ள இவர்களை மீட்ட இந்திய கடலோர காவல்படையினர் இராமேஸ்வரம் கரையோர போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையிலிருந்து தமிழர்கள் தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக சென்ற வண்ணம் உள்ளனர்.இந்நிலையில் மன்னார், பேசாலையை சேர்ந்த அந்தோணி மரிய கொரட்டி, புலக்ஷன்,கணுவியா, சசிக்குமார், சனுஜன், அந்தோணி பெர்ணான்டோ உள்ளிட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 06 பேர் யாழ்ப்பாணத்திலிருந்து படகில் புறப்பட்டு நேற்று (17) காலை தனுஷ்கோடிக்கருகே உள்ள முதல் மணல் திட்டில் இறங்கினர். தகவலறிந்து மண்டபம் கடலோர காவல் படையினர் இலங்கைத் தமிழரை ஹோவர் கிராஃப்ட் படகு மூலம் மீட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்கு கொண்டு வந்து இராமேஸ்வரம் கரையோர போலீசாரம் ஒப்படைத்தனர். விசாரணைக்கு பிறகு 06 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை இவர்களுடன் 181 ஆக அதிகரித்துள்ளது.



தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) சிவஞானம் சிறீதரன் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசனை ஆழ்வார்பேட்டை மாநில தலைமையகத்தில் நேற்று(17/10/22) சந்தித்து உரையாடினார்.

## முச்சக்கர வண்டிகளுக்கு...

மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருளை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், எரிபொருளை இறக்குமதி செய்யவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்

## இலங்கையின் ... 03ஆம் பக்கத் தொடர்

கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கு பரிஸ் கிளப்பின் முழுமையான ஆதரவை இணை தலைவர் ரூஸ் உறுதியளித்தார்,’ என குறிப்பிட்டுள்ளார்.

## தேவைக்கேற்ப QR... 03ஆம் பக்கத் தொடர்

வழங்குவதற்கு QR முறை தடையாக இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டிய போதே மாவட்ட செயலாளர் இந்த அனுமதியை வழங்கினார்.

இதன்படி தேவைக்கேற்ப QR முறைக்கப்பால் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் பிரதேச செயலாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## நாவலப்பிட்டியில் கைதான... 03ஆம் பக்கத் தொடர்

நாவலப்பிட்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு தொகுதியினர் நேற்றைய தினம் நாவலப்பிட்டி நகரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.

போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் பல்வேறு கோரிக்கைகளை விடுத்த போதிலும், அதனையும் பொருட்படுத்தாது போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் இந்த சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## உணவு நெருக்கடியை... 03ஆம் பக்கத் தொடர்

செயற்பாடுகள், அவற்றை சந்தைக்கு கொண்டு வருதல், நல்ல விலையை வழங்குதல் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இந்த நெருக்கடியானது நாம் அனைவரும் எதிர்நோக்கும் ஒரு தேசிய பிரச்சினையாகும். இந்த நெருக்கடியை அனைவரும் எதிர்கொள்ள வேண்டும். இதிலிருந்து மீண்டு வரக்கூடிய பெரும்போக காலப்பகுதிக்கு நாம் வந்துவிட்டோம். இந்த நெருக்கடியான காலத்தை வெற்றிகொண்டு நாம் முன்னேற வேண்டும். அதற்கு அனைவரும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

களுத்துறை மாவட்டத்திலேயே அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. மகாவலி ஆற்றை விட அதிகளவான நீர் இந்த மாவட்டத்திலிருந்து மிகக் குறுகிய தூரத்தில் உள்ள கடலில் கலக்கிறது. இந்த உணவு நெருக்கடியை சமாளித்து தேசிய அபிவிருத்தித் திட்டத்தினை நாம் முன்னெடுத்தல் வேண்டும்.

இதற்காக பெரிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில், பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படாத அரச காணிகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அத்தகைய காணிகள் அடையாளம் காணப்படல் வேண்டும்.

கிராம அலுவலர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கிராமிய மட்டத்திலான குழுக்களும் இது பற்றிய தகவல்களை மேலிடத்திற்கு கொண்டு செல்லுதல் வேண்டும். கிராம மட்டத்திலான வளர்ச்சி மிகவும் முக்கியமானது. அடுத்த வார இறுதிக்குள் உரிய அனைத்து தகவல்களையும் பெற எதிர்பார்க்கிறோம். தேவையான அனைத்து வளங்களும் வழங்கப்படும். அதற்குத் தேவையான சக்தியை ஒவ்வொரு கிராம சேவை பிரிவுக்கும் நாம் வழங்குவோம்.

கடற்றொழிலானது நமது உணவு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மீன்பிடித் தொழிலானது மத்திய வங்கியின் பல்வகைப்படுத்தலுக்குள் உள்ளடங்காது. முன்னொரு காலத்தில் அது விவசாயத் துறையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. நமது உணவு உற்பத்தியின் ஒரு பகுதியாக கடற்றொழிலை அங்கீகரித்தல் வேண்டும். மேலும், மீன்பிடித் தொழிலானது மக்களின் புரதப் பங்களிப்பை அதிகரிக்கின்றது. மேலதிக உற்பத்தியை ஏற்றுமதி செய்து நல்ல வருவாயை ஈட்டக்கூடிய விதத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல் வேண்டும். எனவே மீன்பிடித் துறைக்கு அரசின் பங்களிப்பு நிச்சயம் அவசியம்.

தேயிலை, இறப்பர், தெங்கு பயிர்களுக்கு அடுத்தபடியாக, அதிக அண்ணியச் செலாவணியை ஈட்டித் தருவது, மீன்பிடித் தொழில்தான். உலகமே நம்மிடம் எதிர்பார்க்கும் ஏற்றுமதித் துறை இதுவே.

நம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பற்றி சரியான விதத்தில் அறிக்கை செய்தல் வேண்டும். அவர்கள் கவனிக்கப்படாதுவிடல்கூடாது என்ற முடிவை அரசு எடுத்துள்ளது. களுத்துறை மாவட்டத்தில் பல தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளன.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைகளை உறுதி செய்வதற்கும் அவர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஏற்றுமதி மற்றும் விற்பனை மட்டில் விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்துதல் வேண்டும். இந்த நெருக்கடியை புதிய வழியில் எதிர்கொள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என அனைவரும் ஒன்றிணைய வேண்டும். கிராம மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு, கிராம மட்டத்திலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டத்திற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது.

அரசியல் கோட்பாடுகளற்ற கிராமத்தின் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும். கிராம அதிகாரத்தை பொருளாதார நிர்வாகமாக மாற்ற வேண்டும். கிராம சக்தியை நாடு முழுவதும் கொண்டு செல்லும் திட்டங்களும் தொடங்கப்பட வேண்டும்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மேல்மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க, இராஜாங்க அமைச்சர்களான அனுப பஸ்குவல், பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, மர்ஜான் பளீல், குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, லலித் எல்லாவல, யதாமினி குணவர்த்தன, அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே, களுத்துறை மாவட்டச் செயலாளர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## உடனடி நிவாரணம்... 03ஆம் பக்கத் தொடர்

46,797 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அஜித் நிஷாந்த தெரிவித்தார்.

தற்போது கம்பஹா மாவட்டத்தில் வெள்ளம் குறைந்துள்ளது. இதனால், பாதுகாப்பான இடங்களுக்குச் சென்ற மக்களும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேலும் இந்த சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு வீடுகள் முழுமையாகவும் மேலும் இரண்டு வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் ஆதரவுடன் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் உலர் உணவும் வழங்கப்படும்.

சீரற்ற காலநிலை காரணமாக பரவும் நோய்களை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட சுகாதார பணிப்பாளர் இந்திக்க வன்னிநாயக்க தெரிவித்தார்.

அவ்வாறான அவசரநிலை தொடர்பில் 0332234904 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை வெள்ள நிலைமை தணிந்ததன் பின்னர் பரவிவரும் டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட சுகாதார பணிப்பாளர் இந்திக்க வன்னிநாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், 140 ஆவது படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் பிரதீப் கமகே, கம்பஹா மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், மின்சார சபை அதிகாரிகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமிய விழுமியங்களை பாதுகாக்க வீதியில் இறங்கிய ஈரானிய மாதர்கள்

பிராந்திய மற்றும் உலகளவில் புதிய கலாசார அடித்தளங்கள் மற்றும் கொள்கைகளை திட்டமிடுவதன் மூலம் மேற்குநாடுகளால் மிகவும் சரியானது என்று கருதப்படும் ஆளுகை மாதிரிகளை ஈரான் இஸ்லாமிய குடியரசு சவாலுக்கு உட்படுத்தி, இஸ்லாத்தை அடிப்படையாகக்கொண்ட ஆட்சி முறையை அமுல்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே ஈரானின் எதிரிகள் இஸ்லாமிய ஆட்சி முறையையும் அதன் அடிப்படையிலான அரசையும் தாக்குவதற்கு கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர்.



உலக வல்லாதிக்க சக்திகள் அநேகமாக உலகின் எல்லா நாடுகளிலும் தமக்கென, தமது நலம் காக்கவென சில, பல குழுக்களை அமைத்து, போஷித்து வருகின்றன. இக்குழுக்கள் இஸ்லாமிய ஈரானிலும் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

மஹ்சா அமினியின் மரணத்திற்குப் பிறகு மேற்குலகால் ஈரானுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள பிரசாரங்கள், ஈரானில் பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூகப் பாத்திரங்களுடன் பிணைத்து வேண்டுமென்றே உலகெங்கும் பரப்பப்பட்டு வருகின்றன.

பெண் உரிமை மற்றும் ஒரு பெண்ணின் மதிப்பு என்பது அவர்களின் உடலை அவர்களே நிர்வகிப்பதை அடிப்படையாகக் கொண்டது என்று சிலர் நம்புகிறார்கள். இருப்பினும், இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில், பெண்கள் என்போர் சமூகத்தைக் கட்டியெழுப்பும், புதிய தலைமுறையினரை சிறந்த முறையில் உருவாக்கும் கல்வியாளர்களாக மதித்து கண்ணியப்படுத்தப்படுகின்றனர்.

மஹ்சா அமினியின் மரணம் ஈரானிய அதிகாரிகளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது, ஏனெனில் அவர் ஒரு ஈரானிய பிரஜை. மேலும் ஈரானுக்கு எதிரான இயக்கங்களின் பிரசார சத்தங்களைப் பொருட்படுத்தாமல் இவ்வழக்கு நீதித்துறை அமைப்பில் தொடரப்படுகிறது. 'வன்முறை' மற்றும் 'எதிர்ப்பு' ஆகியவற்றுக்கிடையே ஒரு அடிப்படை வேறுபாடு உள்ளது. இன்று தெஹ்ரான் மற்றும் பிறநகரங்களின் சில தெருக்களில் ஆங்காங்கே நடைபெறும் வன்முறைகள் பொதுச்சொத்துக்களை அழிக்க வழிவகுத்ததோடு பல பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களும் உயிரிழக்கவும் காரணமாக அமைந்தது. புனித குர்'ஆனை கிழித்தெறிதல், தீயிட்டு கொளுத்துதல் போன்ற சம்பவங்கள் நிச்சயமாக சுயபுத்தியுள்ள எந்த முஸ்லிமும் செய்யத் துணியாத ஒன்றாகும். எதிரிகளின் சைபர்ஸ்பேஸ் (Cyberspace) தந்திரங்களில் பரிச்சயம் இல்லாத இளைஞர்கள் சிலர் துரதிர்ஷ்டவசமாக இவர்களின் சூழ்ச்சிக்கு ஆளாகி விடுகின்றனர்.

நாட்டு மக்களின் உயிர் உடைமைகளை பாதுகாக்கும் பொறுப்பு ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்துக்கு உள்ளது. கிளர்ச்சியாளர்கள் மக்களைத் தூண்டிவிட்டு, தவறானதும் ஆத்திரமூட்டும் செய்திகளை பரப்புவதற்கு சைபர்ஸ்பேஸை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்கும் முயற்சியே இணையத்தை தற்காலிகமாக முடக்குவதற்கான காரணமாக அமைந்தது. எதிர்ப்பாளர்கள் உட்பட சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மேலும், இஸ்லாமிய அரசுக்கு எதிரான இயக்கங்களின் தலைவர்களும் ஈரானின் எதிர்ப்பாளர்களும் நாட்டில் கலவரங்களை ஒழுங்கமைப்பதற்காக சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்துவதால், குடிமக்கள் உயிர் மற்றும் பொதுச்சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வலைதள ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கருதப்படுகிறது.

பொலிஸ் வாகனங்களை எரிப்பது, பொலிஸ்காரரின் கழுத்தை அறுப்பது, நாட்டின் பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள், எந்தவொரு சாத்தியமான மற்றும் கணிக்க முடியாத தாக்குதலுக்கு எதிராக காவல்துறை தனது தடுப்பு சக்தியை வலுப்படுத்த வேண்டும் என்ற நிர்பந்தத்துக்கு உள்ளாகின்றது என்பது யதார்த்தம். ஆர்ப்பாட்டங்களின் போது சில தீயசக்திகள் (கூலிப்படைகள்) அதற்குள் நுழைந்து வன்முறைகளில் ஈடுபடுவதை நாம் அறிவோம். ஆர்ப்பாட்டத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் ஆயுதங்களால் காயமடையவில்லை அல்லது கொல்லப்படவில்லை என்று ஈரானிய அரசு உறுதியாக கூறுகிறது. அவர்கள் கலகத்தில் ஈடுபட்ட சில இயக்கங்கள் இஸ்லாம் விரோத வெளிநாட்டு சக்திகளால் இயக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கலவரத்தின் போது கைது செய்யப்பட்ட தலைவர்களில் பெரும்பாலோர் குர்திஸ்தானின் கோம்லே கட்சி (Kurdistan Komle party) போன்ற பிரிவினைவாத குழுக்களையும், முஃபாக்கீன் போன்ற பயங்கரவாத குழுக்களையும் சேர்ந்தவர்கள் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

எட்டு ஆண்டுகால ஈரான்_ஈராக் போரின் போது ஈரானின் எதிரியின் பக்கம் இருந்த இதே குழுக்களின் கைகளில் ஆயிரக்கணக்கான ஈரானிய பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்றதன் மூலம் இரத்தத்தால் கறைபட்டுள்ளன.

பெண், வாழ்க்கை, சுதந்திரம் என்பன மரியாதைக்குரிய வார்த்தைகள், ஆனால் அவை பல சமயங்களில் துஷ்பிரயோகிக்கப்படுகின்றன. ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றி பெறுவதற்கு பெண்களின் பங்களிப்பு மகத்தானது; ஏனெனில், புரட்சிக்கு முந்தைய ஆட்சி பெண்களை பாலியல் கருவியாகவும் பெண்களின் சுதந்திரம் என்ற போலிக்காரணத்தை கூறி, பெண் என்ற பெருமைக்குரிய சொல்லை தமது தேவையை நிறைவேற்றிக் கொள்ள ஷாவின் அரசு தம்மை ஒரு கருவியாக பயன்படுத்தி வருவதை உணர்ந்தததும் அவர்கள் புரட்சியில் பங்கேற்ற முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

ஈரான் மக்கள் குழப்பம் மற்றும் தார்மீக எல்லைகளைத் தாண்டுதல் மற்றும் மனித விழுமியங்களை அவமதித்தல் ஆகியவற்றை சுதந்திரத்தின் எடுத்துக்காட்டுகளாகக் கருதவில்லை, அதை அவர்களின் சிவப்புக்கோடாகக் கருதுகின்றனர். பெண்கள் சுதந்திரம் என்ற சொல்லுக்கு இஸ்லாமியக் குடியரசு வழங்கும் அர்த்தம், சமூக வாழ்க்கையில் அவர்களின் கண்ணியத்தையும் பாதுகாத்து, சமூகத்தை அவர்களுக்கு பாதுகாப்பான இடமாக மாற்றுவதாகும். இஸ்லாத்தில் பெண்களின் நிலையும் மதிப்பும் மேற்கத்திய சமூகங்களில் வழங்கப்படும் அதன் மதிப்பிலிருந்து வேறுபட்டது.

**தாஹா முஸம்மில்**
ஈரான் இஸ்லாமிய கலாசார நிலையம்

## மில்லேவ தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு நன்கொடை





களுத்துறை மாவட்டம் மில்லேவ தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள், புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள், உணவு பெட்டிகள் ஆகியன வழங்கும் வைபவம் ஞாயிற்றுக் கிழமை (16) பூமணி அம்மா அறக்கட்டளை மற்றும் சர்வதேச தமிழ் வானொலி ஆகிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. சுமார் 70,000 ரூபா செலவில் இவைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய அமெரிக்காவைச் சேர்ந்த திரு, திருமதி சிங்க நாயகம் புனிதம் குடும்பத்தினர் மற்றும் கனடாவை சேர்ந்த பூமணி அம்மா அறக்கட்டளை நன்கொடையாளர் திரு. ராதாகிருஷ்ணன், நிகழ்ச்சியின் மலையக செயல்பாட்டாளர் திரு திருமதி ரெஜினா இளஞ்செழியன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் மணி சிறிகாந்த் அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## பொத்துவில் அல்-ஹிதாயாவில் சிறுவர்தின நிகழ்வு, ஊர்வலம்







பொத்துவில் அல்ஹிதாயா வித்தியாலயத்தில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வும், ஊர்வலமும் அதிபர் எம்.எல்.எம்.அஷ்ரப் தலைமையில் இடம்பெற்றன. ஹிதாயாபுரம் சகவாழ்வு சங்கம் மற்றும் பாடசாலை சமூகம் ஒன்றிணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் ரஹிம், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் மற்றும் கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், சகவாழ்வு சங்கத்தின் தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான யூசுப் முகைடீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அல்ஹிதாயா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான எம்.ஐ. எம்.செரீப், எம்.சி.எம்.சம்சுதீன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு மாணவர்களின் பல்வேறு திறமைகளும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**றிசாத் ஏ. காதர்**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)





கஹட்டோவிட முஸ்லிம் மகளிர் பயிற்சி மன்றம் ஏற்பாடு செய்த மீலாத் நபி விழா முழு நாள் நிகழ்வாக ஞாயிற்றுக்கிழமை (16 ) சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.இசட். அஹமத் முனவ்வர் தலைமையில் மன்றத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது மன்றத்திற்கான வாசிகசாலை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு மாநகர பிரதி முதல்வர் எம்.ரீ.எம். இக்பால் வாசிகசாலையை திறந்து வைத்தார். இவ் வாசிகசாலைக்காக ஒரு தொகை நூல்களை முன்னாள் பரீட்சை ஆணையாளர் ஏ.எஸ். மொஹம்மது தலைவர் அஹமத் முனவ்வரிடம் கையளிப்பதை காண்க. முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹம்மது , இலங்கை வானொலி சந்திரன் இளையதம்பி, மௌலவி தஸ்லீம், கிண்ணியா அமீர் அலி உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

(படங்கள் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)


**வாகனங்கள் & இயந்திரங்கள் விலை மனு கோரல்**

| Vehicle No | Make/Model | Yard |
|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | |
| EP BHR-1589 | SUZUKI GIXXER | மட்டக்களப்பு |
| NW BHF-0624 | TVS SCOOTY PEP | குருநாகலை |
| WP BGJ-1824 | BAJAJ PLATINA | குருநாகலை |
| CP BHX-4182 | HERO MAESTRO EDGE | குருநாகலை |
| CP BHY-9248 | BAJAJ PULSAR 150 DTSI | குருநாகலை |
| WP BHO-1826 | TVS NTORQ | குருநாகலை |
| WP BCF-5303 | HERO PLEASURE | களுத்துறை |
| WP BIB-8753 | HONDA NAVI | மாதிவெல |
| UP BFG-5135 | HERO GLAMOUR | மொணராகலை |
| NP BHO4987 | TVS XL SUPER HD | கிளிநொச்சி |
| NP BHZ-0650 | TVS APACHE | கிளிநொச்சி |
| NP BHC-0497 | TVS XL SUPER HD | கிளிநொச்சி |
| NP BHC-1816 | TVS XL | கிளிநொச்சி |
| NP BHP5326 | HONDA DIO | கிளிநொச்சி |
| SP BIB-0910 | HONDA NAVI | காலி |
| SP BIE-8369 | TVS NTORQ | காலி |
| SP BIB-8866 | HONDA NAVI | காலி |
| SP BIQ-0087 | BAJAJ PLATINA ES UG | காலி |
| **முச்சக்கரவண்டிகள்** | | |
| NW QQ-9476 | BAJAJ AUTO AR4S | குருநாகலை |
| NW YX-1952 | BAJAJ RE 206 | குருநாகலை |
| NW QQ-0150 | BAJAJ AUTO AR 4S | குருநாகலை |
| WP GY-3935 | BAJAJ AUTO AR5S | மாதிவெல |
| WP YI-1711 | TVS KING | மாதிவெல |
| NW YB-2750 | BAJAJ AUTO AR4S | மாதிவெல |
| **லொறி** | | |
| SP LL-8475 | TATA ULTRA 912 | மாதிவெல |
| WP DAF-8757 | MAHINDRA MAXXIMO PLUS | மாதிவெல |
| **பஸ்** | | |
| 63-0312 | TOYOTA COASTER | மாதிவெல |
| **இயந்திரம்** | | |
| PRINTING MACHINE | HEIDELBERG MO-S | குருநாகலை |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| தினேஷ் | மாதிவெலி சாலை | 071-0110160 |
| நிபுன ஆகாஷ் | குருநாகலை சாலை | 077-2943514 |
| உதயா | காலி சாலை | 077-6663389 |
| கஜன் | மட்டக்களப்பு சாலை | 074-0806609 |
| ஜனகன் | கிளிநொச்சி சாலை | 076-7625149 |

மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, லொறி, பஸ் மற்றும் இயந்திரங்களை 2022 அக்டோபர் 19ம், 20ம் மற்றும் 21 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து 5.00 மணிவரை பார்வையிடலாம்.

2022 அக்டோபர் 21ம் திகதி மாலை 5 மணிக்கு பார்வையிடும் நேரம் முடிவடையும்

2022 அக்டோபர் 21ம் திகதி வரை மீளப்பெறமுடியாத ரூ. 300 ஐ செலுத்தி டெண்டர் படிவங்களை வாகன சாலை அல்லது கிளையிலிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மாதிவெல சாலை டெண்டர் படிவங்கள் ஏசிய எசெட் தலைமை அலுவகத்தில் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.
தாமதமாக சமர்பிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC

இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02. தொடர்பு.: 011-7-699000



திகதி 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4910
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,263,430.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 2 6 9 2 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.27,875,543.00

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 219
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,420,740.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 11 17 18 37
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,738,380.80

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1365
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,453,440.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 4 2 4 0 5 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,381,627.60

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 940
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,537,820.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 15 22 54 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,111,124.80

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3152
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,216,360.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 19 43 64 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.82,693,961.20

**கோடி 27 + Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1258
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,391,040.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.276,246,002.00
M 19 08 17 26 43
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



**3,500,000 ரூபாவிற்கு மேற்படாத ஒப்பந்தங்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்காக**

**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, றாகம மற்றும் ஏனைய இணைந்த நிறுவனங்களுக்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு (மொத்த தொகையான 3,500,000 ரூபாவிற்கு மேலதிகமாகவில்லாத ஒப்பந்தங்களுக்கானது) 2023 ஆம் ஆண்டிற்காக றாகம போதனா வைத்தியசாலை மற்றும் இணைந்த நிறுவனங்களுக்கு (றாகம புனர்நிர்மாண வைத்தியசாலை, கந்தானை மாவட்ட வைத்தியசாலை, கந்தானை தாதிமார் பயிற்சி பாடசாலை மற்றும் மஹர தலஸ்சீமியா அலகிற்கானவை) ''பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக'' தகுதியும் தகைமையுமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து றாகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட முன்தகைமை ஆவணங்களை இப்போது அழைக்கின்றார்.
2. வேலைத்தளங்கள் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் உள்ளேயே அமைந்துள்ளன. எனவே வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் சாதாரண செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காமல் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒப்பந்தக் காலப்பகுதியானது வேறுபடக்கூடும். இப்பணியானது ஒவ்வொரு நாளுக்குமான அவசர பழுதுபார்த்தல்கள், குழாய் வேலை, கழிவுநீர் வடிகாலமைப்பு, மின்னியல் வேலை, பெயிண்ட் பூசுதல், கொன்கிறீட் வேலை, அலுமினிய வேலைகள், செங்கல் வேலை, வளிச்சீராக்கல், நீர் உட்புகாதமைப்பு போன்றவைகளை அடக்குகின்றது.
3. தேசிய பெறுகை முகவாராண்மையினால் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டியிலுள்ள தேசிய ஷொப்பிங் நடைமுறையை பின்பற்றி முன்தகைமை மேற்கொள்ளப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   **விஷேடத்துவம்** : கட்டிட நிர்மாணம், மின்னியல், வளிச்சீராக்கல் மற்றும் குழாய் வேலை.
   **தரம்** : சி-9 மற்றும் மேற்பட்டது அல்லது ஈஎம்-5 மற்றும் மேற்பட்டது.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   i. ஒப்பந்தக்காரரானவர் சித்திகரமான பராமரிப்பு/ பிரதான ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது இரு வருடங்களுக்கு பணியாற்றிருத்தல் வேண்டும்.
   ii. வைத்தியசாலைகள்/நிறுவனங்கள் செயற்படும் வேளையில் பழுது பார்த்தல்களை உடனடியாகவே சீர்செய்து திருப்திகரமாக பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii. ஒவ்வொரு விடைக்குமான ஏற்றுக் கொள்ளும் தகைமைக்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றுபகரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. 2022 ஒக்ரோபர் 18 ஆம் திகதியிலிருந்து 2022 நவம்பர் 11 ஆம் திகதி வரையும் சாதாரண அலுவலக நேரங்களில் 1,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், றாகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள முன்தகைமை விண்ணப்ப ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் றாகம, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.
7. முன்தகைமை விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் றாகம, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் 2022 நவம்பர் 14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
   தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும்.
8. அனைத்து விண்ணப்பங்களும் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான பிரகடனமொன்றில் உரிய முறையில் கம்பனியின் அதிகாரம் வழங்கப்பட்ட கையொப்பதாரரினால் கைச்சாத்திடமிடப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**றாகம.**
**(தொலைபேசி: 011 2959261/2 - நீடிப்பு 722)**

# கிழக்கின் குரல்



## சிறார்களுக்கு இலைக் கஞ்சி வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)



உணவுப் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக சமுர்த்தி சிறுவர் பராய போஷணை மட்டத்தை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ், இலைக்கஞ்சிகள் வழங்கப்பட்டன.

சிறுவர்களை மந்த போஷணையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் தலைமையில் நடைபெற்றது. இத்திட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மூன்று முன்பள்ளிப் பாடசாலைகளில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எம்.பீ.எம். ஹூசைன், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஜே.எம்.நிஃமதுல்லாஹ், மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இஸட். றஹ்மான், கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.சபாயுடீன், கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ.முஹாஜிர், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இலைக் கஞ்சி வழங்கி வைத்தனர். இதன்போது முன் பள்ளி ஆசிரியர்கள், சமுர்த்தி சங்க தலைவர்கள், மாணவ, மாணவிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

### விடைத்தாள்கள் மதிப்பீட்டுக் கொடுப்பனவுகள்

## உடன் வழங்குமாறு அமைச்சருக்கு கடிதம்

(ஒலுவில் விஷேட நிருபர்)

க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரப்பரீட்சைகளின் (2021) விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக, இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

2021 க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தர மதிப்பீட்டுக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இந்நிலையில், க.பொ.த உயர்தர பரீட்சை (2022) மதிப்பீடு தொடர்பான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்வதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.



ஆயினும் இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு முன்னர், கடந்தகால விடைப்பத்திர மதிப்பீடுகளை மேற்கொண்ட ஆசிரியர்களுக்கு உரிய கொடுப்பனவை வழங்கி நிறைவு செய்வது அவசியம். எனவே,பழைய கொடுப்பனுவுகளை வழங்கி முடிக்கும் வரை,(2022) விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த வரவு செலவு ஒதுக்கீடுகளின் கீழ் உரிய விடயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை வழங்காமல் நீண்டகாலம் இழுத்தடிப்பதற்கு பரீட்சைத் திணைக்களத்துக்கு எந்த வித உரிமையும் இல்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எரிபொருள் போக்குவரத்துப் பிரச்சினைகளால் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கடமைகளை மேற்கொண்டதற்கான கொடுப்பனவுகளே இன்னும் வழங்கப்படவில்லை. இந்நிலையில்,

க.பொ.த உயர்தர விடைத்தாள் (2022) மதிப்பீட்டிற்கான விண்ணப்பப் படிவத்தை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

எனவே, உரிய மதிப்பீட்டுக் கொடுப்பனவை உடனடியாகச் செலுத்த வேண்டுமெனவும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் விநியோகம்

(பெரியநீலாவணை விஷேட நிருபர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு,பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட செயலகம், கலாசார அலுவலர்கள் திணைக்களத்தோடு இணைந்து இதை,ஏற்பாடுசெய்தது. இதற்கமைய,பாடசாலை நூலகங்களுக்கு நூல்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (17) சாய்ந்தமருது மல்ஹறுல் சம்ஸ் மகா வித்யாலயத்தில் (தேசிய பாடசாலை) நடைபெற்றது. கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் 'நெனசர' பாடசாலை நூலக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூல்களை வழங்கினார். மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் உரை நிகழ்த்தினார்.

## வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்



(கிண்ணியா தினகரன் நிருபர்)

சூரங்கல் பிரதேசத்தில், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஐ,எச்,எச் பெல்ஜியம் நிறுவனத்தின் அனுசரணையுடன் அல் ஹித்மதுல் உம்மா பௌண்டேசன், இவ்வுதவிகளை வழங்கியது.

ஐ.எச்.எச்,பெல்ஜியம் நிறுவனத்தின் பிரதிநிதி செய்புள்ளாஹ்கோச், மற்றும் அல்ஹித்மத்துல்உம்மா பௌண்டேசனின் பணிப்பாளர் கஸ்ஸாலி முஹமட் பாத்திஹ் ஆகியோர் இவ்வுலருணவுப் பொதிகளை கடந்த வியாழக்கிழமை (13) வழங்கினர். கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் பிரதேசம், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அதிகளவான மக்கள் வாழும் பிரதேசமாகும்.

வாழ்கைச்செலவு அதிகரித்திருக்கும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இம்மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசன் நிறுவனம், பல பிரதேசங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இவ்வாறு உலருணவுப் பொதிகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலையின் 202 வது நிறைவையிட்டு மட்டக்களப்பில் "வின்வோக்" நடைபவனி

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் 202 ஆவது ஆண்டு நிறைவையொட்டி "வின்வோக் 202" எனும் பவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) காலை பாடசாலையின் அதிபர் திருமதி.தவத்திருமகள் உதயகுமார் தலைமையில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.இதனையொட்டி ஆரம்பமான

"வின்வோக்" பவனி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் பாடசாலையிலிருந்து ஆரம்பித்து மட்டக்களப்பு கல்லடிப்பாலம் வரைச்சென்று, மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது. இந்த பவனியானது மாணவிகளின் துள்ளிசை பாடல், ஆட்டங்கள், அலங்கார வடிவமைப்பு காட்சிகளுடன் இடம் பெற்றது. இவை, சகலரதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டது. இப்பவனியை, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இப்பவனியில் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுஜாத்தா குலேந்திரகுமார் கௌரவ அதிதியாகவும், மாநகர பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், பழைய மாணவர் சங்க செயலாளர் தர்சினி சுந்தரேசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் எனப் பலரும் இப்பவனியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பாடசாலையின் பாரம்பரியம், பெருமைகள், சாதனைகள் என்பனவற்றோடு சமூகத்தின் தேவைப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இப்பவனி அமைந்திருந்தது.

அத்துடன், சூழல் நேயமிக்கதாகவும், நூற்றுக்கணக்கான பழைய மாணவிகள் ஒன்றிணைந்து பாடசாலை சீருடை அணிந்தும், கழுத்துப்பட்டி அணிந்தும் பாடசாலைக்கு வருகைதந்து இப்பவனியில் கூட்டுச்சேர்ந்தும், வலம்வந்தும் பாடசாலைப்பருவத்தை நினைவுகூர்ந்து அன்பை வெளிப்படுத்தியமை வரலாற்றுப்பதிவாக பார்க்ககூடியதாகவுள்ளது.



அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில், சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப்பயிற்சிக்கு அனுசரணை வழங்கியோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. சங்கத்தின் பிரதான ஆலோசகரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ஏ.வாஹீட் இதன்போது ஒருவருக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவிப்பதையும். சங்கத்தின் உறுப்பினர்கள் அருகில் நிற்பதையும் காணலாம்.
(படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## மருத்துவ ஆய்வுகூடத் திறப்பு விழா

(மருதமுனை தினகரன் நிருபர்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திறப்பு விழா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபஸை கௌரவிக்கும் நிகழ்வுகள் அண்மையில், மருதமுனை பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும்.மாவட்ட வைத்திய அதிகாரியுமான டொக்டர் ஏ.எல். எம்.மிஹ்லார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வைத்தியசாலையின் ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வின் சிறப்பு அதிதியாக பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எம். பி.எம்.வாஜித்,விஷேட அதிதியாக டொக்டர் எம்.சி.எம்.மாஹிர், ஆகியோர் பங்கேற்றனர். பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜி.ரீ. ஜெயலால் உள்ளிட்ட வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## யானை தாக்கியதில் நான்கு பிள்ளைகளின் தந்தை மரணம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சேருவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி, நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்தார்.இத்துயரச் சம்பவம் நேற்று (17) இடம்பெற்றது.

சேருவில தங்கநகர் பகுதியிலுள்ள குளத்தில் மீன் பிடிக்கச் சென்று வீடு திரும்பும்போதே, இவரை யானை தாக்கியது. உயிரிழந்தவரின் சடலத்தை மூதூர் நீதவான் எச்.எம். தஸ்லீம் பௌஸான் பார்வையிட்டார். குறித்த பகுதிக்குச் சென்ற கிராமத்தவர்கள், சடலத்தை பார்வையிட்டு தடயங்களை சேதப்படுத்தியுள்ளனர். இதை கண்ணுற்ற நீதவான், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். இன்று (18) செவ்வாய்க்கிழமை பிரேத பரிசோதனை நடாத்தப்படவுள்ள நிலையில், இது றித்த விசாரணைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## ஆயுர்வேத இலவச மருத்துவ முகாம்



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

சர்வேதேச முதியோர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆயுர்வேத இலவச மருத்துவ முகாம்,அக்கரைப்பற்று பிரதேச செயலக மணடபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலகத்திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் எ.எம்.சமீம் தலைமையில் நடைபெற்ற இவ்விலவச முகாமில், இப்பகுதியைசேர்ந்த முதியவர்கள் தமது நீண்டகால நோய்களான ஆஸ்துமா, நீரிழிவு, கொலஸ்ட்ரோல், மூட்டுவலி, போன்ற நோய்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆயுர்வேத வைத்தியார்களான டாடர் எம்.ஹைறூ, டாக்டர் சித்தி ஷமிலா மற்றும் வைத்தியர் டாக்டர் எம்.ரி அமீரா. ஆகியோர் நோயாளர்களின் நோய்தொடர்பான குறைகளையும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளையும் விளக்கினர்.

தீர்வுகாண முடியாதிருந்த பல நோய்களுக்கும் இங்கு தீர்வு காணப்பட்டது.

சிகிச்சை முகாம் ஏற்பாடுகளை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எம்.ஏ. ரபீக்கா மேற்கொண்டிருந்தார்.

## வறுமை ஒழிப்பு தினத்தில் ஜப்பான் மொழிப்பயிற்சிகள்

### ஜப்பான் தொழிற் சந்தைகளை இலக்கு வைத்து திட்டம்



(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஜப்பான் மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அட்டாளச்சேனை பிரதேச சமுர்த்தி பிரிவு இதனை ஏற்பாடு செய்துள்ளது. சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இளைஞர், யுவதிகளுக்கென இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. அம்பாரை மாவட்டம் முழுதும் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு, நேற்று (17) அட்டாளைச்சேனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ சி. அஹமட் ஸாபிர் கலந்து கொண்டார். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிழக்கு மாகாண சிரஷ்ட முகாமையாளர் திருமதி திலங்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஸான், மாவட்ட விடய பொறுப்பு சமுர்த்தி முகாமையாளர் டபிள்யு. ரஞ்ஞனி, சமுர்த்தி வங்கி, வலய முகாமையாளர் எம்.ஏ. இமாமுதீன், திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், திட்ட உதவியாளர் ஏ.எஸ்.எம். உனைஸ், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் எஸ்.ஸபானா உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மட்ட உத்தியோகத்தர்கள், பிரவுகளுக்கான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க மாணவர்களிடையே போட்டிகள்

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'அறிவுமிக்க சமுதாயத்திற்கான வாசிப்பு' எனும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.


திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் இ.வி.கமலராஜனின் தலைமையில், தம்பிலுவில் பொது நூலக நிருவாகத்தினரால் இந்நிகழ்வுகள், முன்னெடுக்கப்படவுள்ளன. மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் பல்வேறு போட்டிகள் நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கதைகூறுதல், வாசிப்பு போட்டிகள், மாணவர்களுக்கு இலவச நூலக அங்கத்துவம் வழங்குதல் மற்றும் இம்முறை திருக்கோவில் பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களை பாராட்டி கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மேலும் நாடளாவிய ரீதியிலும் இவ்வாறு மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு எழுத்தாக்கம், வாசிப்பு மற்றும் நூல்களை சேகரிக்கும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாக்களை சிறப்பிக்கும் நோக்குடன் பிரதேச கல்வியதிகாரிகளும் ஆர்வமுடன் பங்குபற்றி வருகின்றனர்.

# மலைச்சாரல்



## நிறைகுறைந்த சிசுக்கள் பிரசவிக்கப்படுவதற்கு
# கர்ப்பிணிகளின் ஓய்வின்றிய உழைப்பும் காரணம்

**கண்டி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சித்திரமாலி டி சில்வா**

(அக்குறணை குறூப் நிருபர்)

கர்ப்பிணித்தாய்மாரின் ஓய்வின்றிய உழைப்பும் நிறைகுறைந்த சிசுக்களின் பிறப்பு வீதம் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும் என கண்டி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் கருத்து தெரிவிக்கையில்,



இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பெறப்பட்ட தரவுகளின் படி கண்டி மாவட்டத்தில் பிரசவத்தின் போது நிறைகுறைந்த சிசுக்களின் விகிதம் அதிகரித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் கடமையாற்றும் சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொதுவாக எல்லா இடங்களிலும் மந்த போசனை பதிவாகியுள்ளது. சிறுவர்களை மையமாக வைத்து எடுக்கப்பட்ட தகவல்களின் படியே அவை பதிவாகியுள்ளன. அதில் குறிப்பாக ஜனவரி மாதம் முதல் சிசுக்களின் நிறைகள் ஒப்பீட்டளவில் குறைந்து காணப்பட்டுள்ளன.

இதற்கு பிரதான காரணம் கர்ப்பிணித் தாய்மார்கள் போதிய போஷாக்கான உணவுகளை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்க ஓய்வு இன்றி அதிக உழைப்பில் ஈடுபடுவதால் மன உளைச்சலுக்கும் ஆளாகுகின்றனர். இதனால் பிறக்கின்ற குழந்தைகளின் நிறையில் குறைவு காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## தீபாவளி பண்டிகைக்காலத்தில் ஹற்றனில் அதிகரிக்கும் கொள்ளைச்சம்பவங்கள்
**ஐந்து பெண்கள் கைது**



நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

தீபாவளி பண்டிகைக்காலங்களில் கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் ஐந்து பெண்கள் அடங்கிய குழுவை ஹற்றன் பொலிஸார் நேற்று காலை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்று காலை ஹற்றனிலிருந்து பொகவந்தலாவைக்கு சென்ற பஸ் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான பெண்கள் மூவர் இருந்ததையடுத்து ஹற்றன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. ஐந்து பெண்களை சந்தேகத்தின் பேரில் ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண்கள் ஐவரும் பொது போக்குவரத்து பஸ்கள் மற்றும் சன நடமாட்டம் அதிகமான இடங்களில் பல்வேறு திருட்டுச்சம்பவங்களில் ஈடுபடுவதாக சந்தேகிப்பதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தார்.

திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இவர்கள் நேர்த்தியாக ஆடை அணிந்து, தம்மை எவரேனும் சந்தேகம் கொள்ளாதவாறு நடந்துக்கொள்வதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

பெண்களின் பைகளை சோதனையிட்ட போது அதில் பல ஏ.டி.எம் அட்டைகள், அடையாள அட்டைகள் இருந்தமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்களை ஹற்றன் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக்காலங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது வழமையாகிவிட்ட நிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு நகைகள் பணப்பைகள் என்பதை தாமே பாதுகாத்துக்கொள்வது அவசியம் எனவும் அட்டன் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களில் இருந்து பொது மக்களை பாதுகாப்பதற்காக ஹற்றன் பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் சிவில் உடைகளில் பலர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஹற்றன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த பண்டிகைக்காலங்களில் இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 14 பேரை ஹற்றன் பொலிஸார் கைது செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



வரக்காபொல கொஸ்வத்த குடலியந்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவரையும் நேற்று முன்தினம் (16) நேரில் சென்று பார்வையிட்டார். இதுசம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு ஆலோசனை விடுத்துள்ளார். (படம் காவத்தை தினகரன் விசேட நிருபர் டிக்கிரி)

## திருடப்பட்ட சிலையுடன் பெண் ஒருவர் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

கொத்மலை பிரதேசத்திலுள்ள தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த சிலையொன்றை திருடிய பெண் ஒருவரைப் பொலிஸார் சிலையுடன் கைது செய்துள்ளனர். திருடப்பட்ட சிலையை பஸ் வண்டியில் எடுத்துச் செல்லும் போது யக்கலைப் பிரதேசத்தில் வைத்து பொலிஸார் மடக்கிபிடித்துள்ளனர். இதன்போது அவரிடமிருந்த சிலையையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வத்தளைப் பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய பெண் ஒருவர் ஒரு குழுவினருடன் கொத்மலை பிரதேசத்தில் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த போது மேற்படி தேவாலயத்திற்கு வழிபாட்டுக்காக சென்றுள்ளனர். இதன்போதே சிலையை களவாடியுள்ளார். சிலை வைக்கப்பட்டிருந்த இடத்தில் இல்லாமல் இருப்பதைக் கண்ணுற்ற தேவாலய பூசாரி சீ.சீ.டி.வி உதவியுடன் தேடியுள்ளார். அப்போது பெண் ஒருவர் அதனை திருடுவதை கண்ட அவர், காட்சிகளுடன் கொத்மலை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்படி குறிப்பிட்ட வாகனம் பற்றிய தகவலை சீ.சீ.டீ.வி உதவியுடன் திரட்டி தகவல்களை பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கியுள்ளனர். அதனடிப்படையில் யக்கல பொலிஸார் சுற்றுலா பஸ் வண்டியை இனம் கண்டு பரிசோதித்தபோது சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**தொடரும் சீரற்ற காலநிலை**
## பதுளை மாவட்டத்தில் வைத்தியர் ஒருவர் நீரில் மூழ்கி பலி

பதுளை நிருபர்

சீரற்ற காலநிலையினால் பதுளை மாவட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அம்மன் ஆலயமொன்றும் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. உயிரிழந்தவர் மஹியங்கனை அரச மருத்துவமனையில் வைத்தியராக பணியாற்றும் 31 வயது நிரம்பிய திருமணமாகாத லக்சான் விஜயரத்ன என்பவரே குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன் விவசாய நிலங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியதுடன், பகுதியளவில் வீடுகளும், சேதமடைந்துள்ளன. பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினால் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தின் தாழ்நில பிரதேசங்களிலும், ஆறுகளுக்கு



அருகாமையில் உள்ளவர்களும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவத்தினர் மக்களை கேட்டுள்ளனர். மஹியங்கனை அரச மருத்துவமனையில் பணியாற்றும் வைத்தியர்கள் இருவர் நேற்று மாலை மாப்பாகவெவ குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது வைத்தியர்களில் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். மற்றைய வைத்தியர் எழுப்பிய கூக்குரல் சத்தத்தினையடுத்து அயலவர்கள் ஓடி வந்து குளத்தில் இறங்கி தேடுதலை மேற்கொண்டனர். அவ்வேளையில் வைத்தியரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது. உடனடியாக சுவசரிய வாகனத்தை வரவழைத்து வைத்தியரை மஹியங்கனை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும், அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இவரது சடலம் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதுடன், மரண விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

தெமோதரை பெருந்தோட்டத்தைச்; சேர்ந்த றப்பர் டிவிசன் தோட்ட ஸ்ரீ அம்மன் ஆலயம் கடும் காற்றுடன் கூடிய மழையினால், அருகேயுள்ள ஆலமரம் முறிந்து விழுந்து சேதத்திற்குள்ளாகியமையும் குறிப்பிடத்தக்கது.

## தொடர் மழை பெய்வதால் களுகங்கையின் நீர்மட்டம் அதிகரிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி உட்பட மாவட்டத்தின் பல இடங்களில் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் களு கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துவருவதாக நீர்ப்பாசனத்திணைக்களத்தின் இரத்தினபுரி காரியாலய அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

களுகங்கையின் கிளை ஆறுகள் உள்ள நீரேந்து பிரதேசங்களிலும் மழை தொடர்வதால் களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களின் களுகங்கையின் எல்லைப்பகுதியான மில்லகந்த பகுதியில் நேற்று 7 அடி 8 அங்குலத்தில் நீர்மட்டம் அதிகரித்து காணப்பட்டதாக தெரி



விக்கப்படுகின்றது. இந்நிலைமை சாதாரண வெள்ள நிலைமை ஏற்படுவதற்கான அறிகுறி எனவும் இந் நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலை அடிவாரம் மற்றும் பலாபத்தல கிலீமலை பிரதேசங்களில் மழை பெய்வதால் இரத்தினபுரி பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## சஞ்சிகை வெளியீடு

(அக்குறணை குறூப் நிருபர்)

மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களின் இளைஞர் பங்கேற்புத் திட்டத்தின் கீழ் 'பாலம்' என்ற சஞ்சிகையின் வெளியீட்டு விழா கண்டி, பொல்கொல்லை தேசிய கூட்டுறவு கல்வி நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. 'சையில்ட் கெயார் பாத் லங்கா' நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸ தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. இன ஐக்கியத்திற்கு வித்திடும் செயற்திட்டத்திற்கான அனுசரணையை வழங்கும் 'எல்விட் டாஸ்' நிறுவனத்தின் கண்டி மாவட்ட இணைப்பாளர் ரமேஸ் குமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். முதற் பிரதியை 'சையில்ட் கெயார் பாத் லங்கா' நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸவிடமிருந்து அவர் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியை கல்ஹின்ன மத்ரசதுல் பலாஹ் அரபுக் கல்லூரி விரிவுரையாளர் மவ்லவி எம்.எஸ்.எம்.மிர்சாத் பெற்றுக் கொண்டார்.

கண்டி கும்புக்கந்துறை அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் (14.10.2022) வித்தியாலயத்தின் அதிபர் எப்.எம்.ரஷாத் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக வத்தேகம வலய கல்விப் பணிமனையின் வரலாற்றுப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜே.எப். ரஹ்மான், விஷேட அதிதிகளாக எஸ்.எம்.மதீனா, தேசஅபிமானி எஸ்.ஏ. ஹனீப், எஸ்.எம். பைசர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.
(படம் பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)





மலையக மக்களின் 200ஆவது (1823 2023 ) வரலாற்று ஆண்டு நிறைவை முன்னிட்டு பசறை நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் (16) நடைபெற்றது. மலையக மக்களின் மாண்பினை காக்கும் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மலையக மக்களின் உரிமை குரல்கள் இடம்பெற்றதோடு நூற்றுக்கணக்கான மலையக உறவுகள் கலந்து கொண்டிருந்தனர். (படம் லுணுகல நிருபர்)

## இனரீதியான அரசியல் கட்சிகள் தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து விட்டன

**சம்ஸம் பவுண்டேசன் பணிப்பாளர் மௌலவி அம்ஹர் ஹகம்**

(எம்.ஏ.அமீனுல்லா,அக்குறணை குறூப் நிருபர்)

இ லங்கையில் மொழிரீதியிலான பாடசாலைகளும், இனரீதியான அரசியல் கட்சிகளும் தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து விட்டதாக சம்ஸம் பவுண்டேசன் பணிப்பாளர் மௌலவி அம்ஹர் ஹகம் தெரிவித்தார்.

மடளை ஜாமியுல் கைராத் ஜும்மா பள்ளியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



ஒவ்வொரு சமயத்தினரும் பிற மதங்களையும் அவர்களது கலாசாரத்தையும் பற்றி கற்றுக்கொள்ளுங்கள்.

இலங்கையில் ஒல்லாந்தர், போர்துக்கேயர் போன்றவர்களது வருகைக்கு முன்பே அரேபிய வர்த்தக தொடர்புகள் இலங்கையில் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் இருந்துள்ளன. அவற்றை முஸ்லிம்களே அபிவிருத்தி என்ற அடிப்டையில் அழித்து விட்டனர். தொலமி என்ற கடலோடியின் இலங்கை பற்றிய குறிப்பில் தெதுரு ஓயாவை அரேபிய நதி என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியாயின் தொலமியின் வருகைக்கு முன்பே இலங்கைக்கும் அரேபியர்களுக்கும் தொடர்புகள் இருந்துள்ளன. 6ஆம் அக்ரபோதி மன்னன் காலத்தில் அரேபியாவிற்கு அனுப்பப்பட்ட ஒரு தூதுக்குழுவை, கடற்கொள்ளையர்கள் தாக்கியதாகவும் அவர்களுக்கு பாதுகாப்பு அழிக்க அன்றைய இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் இருந்து முஹம்மத் பின் காசிம் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டதாகவும், அப்படையே பின்னர் இந்தியா வரை வந்து ஆசியாவில் இஸ்லாத்தை பரப்பியதாகவும், இந்தியாவை 600 வருடங்களுக்கு மேல் முஸ்லிம்கள் ஆண்ட வரலாறும் பதிவாகி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு;

# மின்சாதனங்கள் விற்பனை போர்வையில் போதை மாத்திரைகள் விநியோகம்

## வீதிச் சோதனையில் இருவர் கைது; சுற்றிவளைப்பில் பலர் சிக்கினர்

வடபகுதியில் கடந்த சில நாட்களாக போதைபொருள் விற்பனையுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் போதை மாத்திரைகளுடன் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராணுவ புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து 296 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் மின் சாதன விற்பனையாளர்கள் போன்று நடமாடி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். கல்வியங்காட்டு பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மேலும் சில நபர்கள் கல்வியங்காடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர் என பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது.

அதன் அடிப்படையில் கல்வியங்காடு பகுதியில் பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தவேளை மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கிடமான முறையில் பெட்டி ஒன்றுடன் பயணித்த இருவரை பொலிஸார் வழிமறித்து சோதனை செய்தனர்.

அதன் போது அந்த பெட்டியினுள், மின் குமிழ்கள் உள்ளிட்ட மின் சாதன பொருட்கள் காணப்பட்டன. அவற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 120 க்கும் மேற்பட்ட



போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. அதனை அடுத்து மோட்டார் சைக்கிளில் வந்த சுன்னாகம் மற்றும் கல்வியங்காடு பகுதிகளை சேர்ந்த இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

போதை பொருள் வாங்க வருவோரிடம் பணம் இல்லாத போது அவர்களின் மோட்டார் சைக்கிள்கள், கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை அடகாக எடுத்துக்கொண்டு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் எனும் சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியில், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தொடர்பிலான இரகசிய தகவல், மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கபெற்றமையை அடுத்து யாழ். பொம்மைவெளி பகுதிக்கு விரைந்த புலனாய்வு பிரிவினர் மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் வாங்குவதற்காக சந்தேக நபர்களிடம் அடகு வைக்கப்பட்ட 07 கையடக்க தொலைபேசிகள் மற்றும் சுமார் 08 இலட்ச ரூபாய் பெறுமதியான நவீன ரக மோட்டார் சைக்கிள் என்பனவும், பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# வேம்படி மகளிர் பாடசாலை மாணவி சிறந்த இளம் புத்தாக்குநராக தெரிவு

கோப்பாய் குறுப் நிருபர்

இவ்வாண்டுக்கான சிறந்த மாணவ இளம் புத்தாக்குநராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி மதுரா அருந்தவம் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டு பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

வளர்முக நாடுகளின் பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் இலங்கைக் கிளையும், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிறப்புரிமையியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல்த்துறையும் இணைந்து நடத்திய தேசிய ரீதியிலான மாணவருக்கான புத்தாக்கப் போட்டியிலே இந்த மாணவி தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூதவை மாநாட்டு மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் சிறந்த பெண்



புத்தாக்குநருக்கான பதக்கத்தை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சித்தானந்த லியனகே அணிவித்ததுடன், இவருக்கான சான்றிதழை வளர்முக நாடுகளுக்கான பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் தலைவி பேராசிரியர் சுகந்திக்கா சுரேஷ் வழங்கி வைத்தார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலை கண்டித்து போராட்டம்



வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலை கண்டித்து பிரதேச செயலக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் கவனயீர்ப்பு போராட்டமொன்றையும் மேற்கொண்டனர்.

வவுனியா பிரதேச செயலக வாயிலின் முன்பாக நேற்று (17) காலை 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை இக்கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கந்தபுரம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை (12) இடம்பெற்ற சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பான கூட்டத்தின் போது அங்கு சென்ற பொதுமகனொருவர் தனது சமுர்த்தி முத்திரை வெட்டப்பட்டமை தொடர்பில் குறித்த பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் இறுதியில் சமுர்த்தி உத்தியாகத்தர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் காயமடைந்த கந்தபுரம் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தாக்குதல் மேற்கொண்ட பொது மகனை வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸார் கைது செய்தனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு நீதியான தீர்வு கோரியும் வவுனியா பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம் மற்றும் பிரதேச செயலகத்தினர் ஆகியோரின் தலைமையில் பிரதேச செயலக வாயிலின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் காலை 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை பணிப்புறக்கணிப்பிலும் ஈடுபட்டனர்.

# வடமாகாண கடற்றொழிலாளர்கள் வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்

கோப்பாய் குறுப் நிருபர்

வடமாகாண கடற் தொழிலாளர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சூம் (zoom) செயலி ஊடாக சனிக்கிழமை (15) கலந்துரையாடியுள்ளனர்.

வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

காலந்துரையாடலில் யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் சமாசத்தின் தலைவர் அன்னலிங்கம் அன்ன ராசா கூறுகையில், சட்ட விரோத சுருக்கு வலைத் தொழிலைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட ஏற்பாடுகள் இருந்தும் கடற்படை அதனை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டுவதாக தெரிவித்தார்.



பாரம்பரிய மீனவ மக்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் பொருட்டு கடற்படைக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஆளுநரிடம் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

முல்லைத்தீவு கடற் தொழிலாளர் சார்பில் கிராமிய கடற் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அருள்நாதன் கருத்துத் தெரிவிக்கையில், கடற் தொழிலுக்கு தேவையான மண்ணெண்ணையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் தடையின்றி அதனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் சார்பில் அதன் தலைவர் ஆலம் பங்கு பற்றியதுடன் தமது பிரதேசத்தில் அமைக்கப்படும் காற்றாலையால் தமது பிரதேச மக்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என ஆளுநரைக் கோரினர்.

இவ்வாறு பல விடயங்கள் தொடர்பில் வடக்கு ஆளுநருக்கு சுட்டிக்காட்டிய மீனவ சங்கப் பிரதிநிதிகளிடம் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில், குறித்த விடயங்கள் தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகளையும் மீனவப் பிரதிநிதிகளையும் அழைத்து பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடி முடிவு ஒன்றை எட்டுவதாக தெரிவித்தார்.

மேலும் சுருக்கு வலை தொடர்பில் சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை மீறி தொழில் செய்ய முடியாது என கூறியதுடன் மீனவ சங்கங்கள் எழுத்து மூலம் தந்தால் நீதிமன்ற நடவடிக்கைக்கு தான் தயாராகவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை

யாழ். விசேட நிருபர்

வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம், மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 22 மற்றும் 23 ம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை கைதடியில் உள்ள வடமாகாண சபை வளாகத்தில் நடைபெறவுள்ளதாக வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜிவா சிவதாஸ் தெரிவித்தார்,

இந்த நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

வாசித்தலில், எழுதுதலில், விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளலும். சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல். வாகனபதிவுப் புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல். வாகன இலக்கத்தகடு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள். வாகன உடமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல். வாகன நிறை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல். இதுவரை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாத நிலுவைகள், வாகன வருமானவரி தொடர்பானவை போன்ற விடயங்கள் நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளதன் காரணமாக பொதுமக்கள் இரண்டு நாள் நடமாடும் சேவையின் மூலம் பயன் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய குற்றச்சாட்டு:

# தமிழகத்தில் கைதான இலங்கை மீனவர்களுக்கு 31 வரை விளக்கமறியல்

(மன்னார் குறுப் நிருபர்)

எல்லை தாண்டி மீன்பிடித்து கொண்டிருந்ததாக தமிழகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (16) கைதான இலங்கை மீனவர்கள் 5 பேரையும் இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை (17) பொலிஸாரால் ராமநாதபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மார்க்ஸ் ஜூட் மாஸ்டர், ஆண்டனி ஹேமா நிஷாந்தன், இம்மானுவேல் நிக்சன், துருவந்தா ஸ்ரீலால், சுதீஷ் சியான் ஆகிய 5 இலங்கை மீனவர்களையே இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடல் எல்லையை தாண்டி இந்திய எல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இவர்களிடம் இருந்து ஒரு படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து விசாரணைக்காக தூத்துக்குடி தருவைகுளம் கடற்கரைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களிடம் கடலோர காவல் படையினர் விசாரணை மேற்கொண்டு வந்தனர். அவர்களை நேற்று திங்கட்கிழமை (17) காலை 10 மணி அளவில் பொலிஸார் ராமநாதபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி இலங்கை மீனவர்கள் ஐவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.அதனையடுத்து மீனவர்கள் ஐவரும் சென்னை புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# வெட்டுக்காயங்களுடன் ஒருவர் மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லிபுர குறிச்சி பகுதியில் வெட்டுக்காயங்களுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்லிபுர குறிச்சி பகுதியில் கடுமையான வெட்டுக்காயங்களுடன் நபர் ஒருவர் காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் காயங்களுடன் காணப்பட்டவரை மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# விசுவமடுவில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையம் நடத்திய அறுவடை போற்றல் விழா கடந்த சனிக்கிழமை (15) விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவம் பொறியியல் உள்ளிட்ட விஞ்ஞானத் துறைக்காகவும் 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலை மற்றும் வணிகத் துறைக்காகவும் விசுவமடு பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியமையை கௌரவிக்கும் முகமாகவும் தற்போது கற்கும் மாணவர்களுக்கு ஊக்கம் வழங்கும் முகமாகவும் இந்த விழா நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா கலந்து கொண்டார்

சிறப்பு விருந்தினர்களாக யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி நிலைய தலைவருமாகிய மருத்துவர் த. சத்தியமூர்த்தி, பிரபல உயிரியல் ஆசான் வ.சி. குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ஞான. ஆதவன் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசன் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.


மாணவர்களிடையே கல்வித் திறமை மற்றும் கலைத் திறமை சார்ந்த அடிப்படையில் சிவகுமார்



கருஷா என்ற மாணவிக்கு சாதனை மாணவி என்ற விருதும் ரூபாய் 25000 பணப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு (16) இடம்பெற்றது. யாழ்.கோண்டாவில் கலைவானி வீதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்ற நிகழ்வின் போது மக்கள் சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.
(படம்: யாழ்.விசேட நிருபர்)



புத்தளம் மாவட்ட

# அரச உத்தியோகத்தர்களுக்கு அரச மொழிக்கொள்கை தொடர்பில் செயலமர்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு அரச மொழிக் கொள்கைதொடர்பானவிழிப்புணர்வு செயலமர்வொன்று அண்மையில் புத்தளம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

புத்தளம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் (MWDT) மற்றும் கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி மையம் (ESDF) ஆகியன புத்தளம் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் தேசிய அரச கரும மொழி திணைக்கள ஆணையாளர் பிரின்ஸ் சேனாதிர வளவாளராக கலந்து கொண்டு இச்செயலமர்வை நடாத்தினார்.

மொழி சமத்துவத்தை மேம்படுத்துவதன் ஊடாக சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான கூட்டு நடவடிக்கையை மேற்கொள்வதே இச்செயலமர்வின் நோக்கமாகக் காணப்பட்டது.

இச்செயலமர்வில் புத்தளம் மாவட்ட உதவிச் செயலாளர், புத்தளம் பிரதேச செயலாளர் உட்பட புத்தளம் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், தள வைத்தியசாலை, நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம், நகரசபை, கல்வித் திணைக்களம், விவசாய திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி அரச உத்தியோகத்தர்கள் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.

# பேருவளை பாஸியதுந் நஸ்ரியாவில் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு

## பிரதம அதிதியாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி பங்கேற்பு



(பேருவளை விசேட நிருபர்)



மக்கொன ஸுல்பிகா எம். ஸாலிஹ் ஸினான் எழுதிய 'சிந்திக்க மறந்த உள்ளங்கள்' மற்றும் எழுத்தாளர் திக்குவல்லை ஸஃப்வானின் 'வாப்பாவுக்கு ஒரு சால்வை' ஆகிய சிறுகதை நூல்களின் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (16) பேருவளை, மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தர்காநகர் ஸாஹிரா கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் எம்.எல்.ஏ. எம். அப்துல் அஃலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இரத்தினக்கல் வியாபாரியும் பியூட்டி ஜெம்ஸ் உரிமையாளருமான அஸ்ஹர் ஸவாஹிர் நூல்களின் முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாகவும் விசேட அதிதிகளாக அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் மஸ்னவியா றிப்கான் மற்றும் எழுத்தாளரும் கவிஞருமான தர்காநகர் ரி.எம். ஸபா கலந்துகொண்டனர். அத்துடன் பாடசாலை அதிபர்கள், எழுத்தாளர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். சிந்திக்க மறந்த உள்ளங்கள் சிறுகதை நூலுக்கான ஆய்வுரையை திக்குவல்லை ஸும்ரியும், வாப்பாவுக்கு ஒரு சால்வை நூலுக்கான ஆய்வுரையை பன்னூலாசிரியர் கலாபூஷணம் திக்குவல்லை கமாலும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து பன்னூலாசிரியர் கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கருத்துரை வழங்கினார்.

# பாதுகாப்பற்ற மின் கம்பியில் சிக்கி தந்தை, மகன் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

சமய நிகழ்வொன்றிற்காக வீட்டை புதுப்பித்துக் கொண்டிருந்த தந்தையும் மகனும் பாதுகாப்பற்ற மின் கம்பியில் சிக்கி தாக்குதலுக்கு உள்ளானதில் 19 வயது இளைஞன் உயிரிழந்துள்ளதாக பூநேவ பொலிஸார் தெரிவித்தனர்.

மகாகோன்கஸ்கட பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

சமய நிகழ்வுக்கு முக்கியஸ்தர்கள் வருவதனால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக வீட்டின் பிரதான நுழைவாயில் பகுதியில் தற்காலிக கூடாரம் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்த போது அருகில் இருந்த கராச் ஒன்றின் மின்சார இணைப்பு கம்பியில் தகரம் பட்டதனால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு முதலில் தந்தைக்கு மின்சாரம் தாக்கியுள்ளதுடன் அந்த நேரத்தில் இளைஞன் கீழே விழுந்து மீண்டும் எழுந்துள்ளதுடன் பின்னர் மீண்டும் தூர எறியப்பட்டு சுவரில் தலை அடிபட்டு இளைஞன் உயிரிழந்துள்ளதாக பூநேவ பொலிசார் தெரிவித்தனர்.

# மருந்து வில்லைகள் தொண்டையில் இறுகியதில் மூன்றரை வயது குழந்தை பலி

லோரன்ஸ் செல்வநாயகம்

மருந்து வில்லைகள் தொண்டையில் இறுகியதில் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. அவ்வாறு மருந்து வில்லைகளை விழுங்கியுள்ள குழந்தை நேற்று முன்தினம் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

குழந்தையை பீடித்திருந்த தடுமல் நோய்க்கு பெற்றுக் கொண்ட மருந்துகள் சில மேசையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த மருந்து வில்லைகளை உட்கொள்ள முயன்றுள்ளார். அந்த சந்தர்ப்பத்திலேயே மருந்து வில்லைகள் தொண்டையில் இறுகி குழந்தைக்கு மூச்சு விட முடியாது போயுள்ளது. உடனடியாகவே தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு குழந்தை கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அதனையடுத்து காலி கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரூ. 03 இலட்சம் பெறுமதியான கைத்தொலைபேசிகளை திருடிய மாணவர்கள் சந்தேகத்தில் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மூன்று இலட்சம் ரூபா பெறுமதிமிக்க ஐந்து கைத் தொலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டு தொடர்பில் கல்கிரியாகம பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 14 வயதுடைய மூன்று மாணவர்களும் நன்னடத்தை பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த மாணவர்களை எதிர்வரும் 19ம் திகதி வரை வடமத்திய மாகாண நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் பொறுப்பில் வைக்குமாறு கெக்கிராவ மாவட்ட நீதிபதி மற்றும் நீதவான் சமன் வரணியகொட உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களான மாணவர்கள் தொடர்பில் தொடர்ந்து கண்காணிப்புடன் இருக்குமாறும் கெக்கிராவ நீதவான் சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி கருணா கீர்த்திரத்னவுக்கு மேலும் உத்தரவிட்டுள்ளார். சிறுவர்கள் மூவர் தொடர்பில் ஒவ்வொருவரினதும்குடும்பப்பின்னணி தொடர்பில் தனித்தனியாக நீதிமன்றிற்கு அறிக்கை சமர்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கல்கிரியாகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ருக்மல் ரத்னாயக்கவின் ஆலோசனைப்படி பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி கருணா கீர்த்திரத்னவினால் தனிப்பட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.



உடப்பில் ஸ்ரீவீரபத்திரகாளியம்மன் ஆலய வேள்விப் பொங்கல் உற்சவம் நிறைவடைந்ததையிட்டு, கச்சான் காற்று குறைவடைந்து தற்போது வாடைக்காற்று ஆரம்பமாகி கரைவலை வள்ளங்களின் தொழில் அண்மையில் சம்பிரதாயப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது வள்ளம் ஒன்று கடலில் செல்ல தொழிலுக்கு ஆயத்தமாகிய வேளை, பொங்கல் செய்யப்பட்டு கடலில் செலுத்தப்பட்டபோது எடுத்த படம்.

(படம்; உடப்பு குறூப் நிருபர்)

# இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் UAE தூதுவருடன் சந்திப்பு



ருஸைக் பாரூக்

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் ஆகியோர் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலிட் நாசர் அல் அமெரி அவர்களை சமீபத்தில் ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் அதில் பிரதானமாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் சவால்கள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள், இளைஞர்களின் அரசியல் துறை உட்பட துறைசார் வகிபாகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலின் போது ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் குறிப்பிடுகையில் ; ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கையின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைக்கின்ற வகையில் "Youth Exchange Programe" ஒன்றை நடத்த விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# "காலநிலையை கையாளும் செயலகம்" ஜனாதிபதியின் முடிவு சாதுர்யமானது



காலநிலை மாற்றம் தொடர்பான செயலகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கதென, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கோப் 27 காலநிலை மாநாடு நவம்பரில் எகிப்தில் நடைபெற உள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் இச்செயலகத்தை நிறுவ தீர்மானித்துள்ளமை தூரதிருஷ்டியுள்ள நடவடிக்கை என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காலநிலை மாற்றத்தால் உலகம் பெரும் ஆபத்தை எதிர்கொள்கிறது. இதனால் ஏற்படும் அழிவுகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள வல்லரசுகள் முயல்கின்றன. இந்த முயற்சிகளை முன்னுதாரணமாகக் கொண்டுதான், இலங்கையிலும் காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் நிறுவப்பட உள்ளது. சூழலைப்பாதுகாத்து மக்களை சுகதேகிகளாக வாழ வைக்கும் ஜனாதிபதியின் முடிவு சாலச்சிறந்ததும், காலத்துக்கேற்றதுமாகும். மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் நிறுவப்படவுள்ளதுடன், இம்மாற்றங்களை கையாள்வதற்கான சட்ட மூலமும் தயாரிக்கப்படவுள்ளது.

இதுபோன்ற ஜனாதிபதியின் முன்னோடி வியூகங்கள் காலநிலையால் பாதிக்கப்படும் எமது நாட்டையும் பாதுகாக்க உதவும் என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் நம்பிக்கை தெரிவித்தார்.

# வெலிகம அறபாவில் கௌரவிப்பு நிகழ்வு



(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம அறபா தேசிய பாடசாலையில் சிறுவர் மற்றும் ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. கல்லூரி அதிபர் எம். டீ.எம் முதஹ்ஹர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றதோடு ஆசிரியர்களது நாடகமொன்றும் அரங்கேரியமை சிறப்பம்சமாகும். மேலும் மாணவர்களால் அதிபர், ஆசிரியர்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வை பாடசாலை உயர்தர மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாச்சியாதீவு மு. வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி பெற்றுக்கொள்ள நிதி

திறப்பனை தினகரன் நிருபர்



அநுராதபுரம் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இது காலவரையில் சரியான ஒலி பெருக்கி வசதி இல்லாமை நீண்ட கால குறைபாடாக இருந்து வந்தது. இது தொடர்பில் நாச்சியாதீவைச் சேர்ந்த சமூக சேவையாளர் எஸ். எச்.எம். வாஹித் (முஹாஜிரீன்) அண்மையில் இதற்காக தனது சொந்த நிதியில் முழுமையான நிதியுதவியினை வழங்கினார்.

இதன் போது சுமார் நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் (4,25,000) ரூபாவினை பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முன்னிலையில் பாடசாலை அதிபர் ஆர். எப். எஸ்.ரசூலிடம் ஒப்படைத்தார். அவருக்காக பாடசாலை சமூகம் பிரார்த்திக்கிறது.

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

### வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

2022-10-14ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ரன்தெனிகல Tree Center பயிற்சி நிலையக் கட்டிடத்தின் (D-10) திருத்தவேலை விளம்பரத்தில் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- CIDA நிறுவனத்தின் பதிவு C5/C6/C7 (கட்டிடங்கள்) எனத் திருத்தப்பட்டுள்ளது. ஏனைய தகவல்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி அமைச்சு

### உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு Art Papers & Boards ஆகியவற்றின் வழங்கலுக்கான பெறுகை

### IFB:ED/07/101/15/2022/INCL/02(SPC)

1. உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு **Art Papers & Boards** ஆகியவற்றின் வழங்கலுக்கான பெறுகைக்காக, கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 4 இலிருந்து 6 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் பின்வரும் அம்சங்களுக்காக விலைகளை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொகுதி இல. | அம்சத்தின் விளக்கம் | விலைமனுப்பிணையின் தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| Lot-A | Papers | 1,000,000 |
| Lot-B | Boards | 3,000,000 |

விலைமனுதாரர் விலைமனுவுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதியிலுள்ளவாறான விலைமனுப்பிணைகளை வழங்கல் வேண்டும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி அமைச்சின் 'இசுறுபாய', 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141-50 நீடிப்பு 1530) 2022 நவம்பர் 08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. 2022 நவம்பர் 8 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 40,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகைப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. 2022 நவம்பர் 9 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஆகியன அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of supply of Art Papers & Boards for the use of Ministry of Education under the Indian Line of Credit through local Agents IFB:ED/07/101/15/2022/INCL/02(SPC).**

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய",**
**பத்தரமுல்ல.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி அமைச்சு

### உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு பிளேட்டுக்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் வழங்கலுக்கான பெறுகை

### IFB:ED/07/101/15/2022/INCL/04(SPC)

1. உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு பிளேட்டுக்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் வழங்கலுக்கான பெறுகைக்காக, கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 4 இலிருந்து 6 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் பின்வரும் அம்சத்திற்கு விலைகளை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொகுதி இல. | அம்சத்தின் விளக்கம் | விலைமனுப்பிணையின் தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| Lot-A | Plates and Chemicals | 250,000 |

விலைமனுதாரர் விலைமனுவுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதியிலுள்ளவாறான விலைமனுப்பிணைகளை வழங்கல் வேண்டும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி அமைச்சின் 'இசுறுபாய', 5ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141-50 நீடிப்பு 1530) 2022 நவம்பர் 08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. 2022 நவம்பர் 3 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 5,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகைப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. 2022 நவம்பர் 9 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஆகியன அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of Plates and Chemicals for the use of Ministry of Education under the Indian Line of Credit through local Agents IFB:ED/07/101/15/2022/INCL/04(SPC).**

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய",**
**பத்தரமுல்ல.**

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

### ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

DRP

## அறிவித்தல்

### ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் போது அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் பிற சேவைகளை வழங்கும்போது அறவிடப்படும் கட்டணங்களை திருத்தம் செய்தல்.

2022.09.22 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, **2022.11.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்** வகையில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் பணிகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள், அந்தந்த பணிக்கு முன்னால் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுமென இத்தால் அறியத்தருகிறேன்.

### அட்டவணை

| பணி | கட்டணம் |
|---|---|
| 1. முதற் தடவையாக பதிவு செய்யப்பட்டு தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்காக | ரூ. 200/- |
| 2. தேசிய அடையாள அட்டையின் திருத்தம் செய்யப்பட்ட பிரதியினை விநியோகிப்பதற்காக | ரூ. 500/- |
| 3. தொலைந்துபோன தேசிய அடையாள அட்டையின் இணைப்பிரதியினை விநியோகிப்பதற்காக | ரூ. 1,000/- |
| 4. செல்லுபடிக்காலம் முடிவடைந்த தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக புதிய தேசிய அடையாள அட்டையினை விநியோகிப்பதற்காக (இலத்திரணியல் அடையாள அட்டை விநியோகத்தின் பின்னர்) | ரூ. 200/- |
| 5. ஒருநாள் சேவையினூடாக அடையாள அட்டை விநியோகிப்பதற்காக (விண்ணப்பப்படிவ கட்டணத்திற்கு மேலதிகமாக) | ரூ.2,000/- |
| 6. தேசிய அடையாள அட்டையை ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்பதற்காக | ரூ.2,000/- |
| 7. தேசிய அடையாள அட்டையின் தரவுகளின் உண்மைதன்மையினை உருதி செய்தல், | |
| i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள வங்கி,பொருளாதர நிருவனம்,அரச கூட்டுதாபனம்,நியதிச்சட்ட சபை, அரச உடமை செய்யப்பட்ட நிருவனம் அல்லது யாதேனும் ஆவண மயமாக்கப்பட்ட சட்டத்தின் கீழ் நிருவப்பட்ட நிருவனங்கள் மூலம் கோரப்படும் கோரிக்கைக்கு | ரூ.500/- |
| II) தனிநபர் மூலம் கோரப்படும் கோரிக்கைக்கு | ரூ.1,000/- |
| 8. புகைப்பட நிலைய பதிவு கட்டணம் | ரூ.15.000/- |
| 9. புகைப்பட நிலைய பதிவு கட்டணத்தினை புதுப்பித்தல் (இரண்டு வருடங்களுக்கு) | ரூ.3.000/- |

**வியானி குணதிலக**
**ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்,**
**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்,**
**10ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

### சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)

SARP Smallholder Agribusiness & Resilience Project

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### SARP அலுவலகங்களுக்கு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்

### குறிப்பீட்டிலக்கம்: LK-MOA-SARP-2000003227-NCB- 1

1. பின்வரும் உருப்படிகளின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| லொட் இல. | பிரதேசம் | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|---|
| Lot 01 | திட்ட அமுலாக்கல் பிரிவு - கொழும்பு | பயணிகள் வேன் - High roof (Dual AC) | 01 | ரூபா 174,000,00 |
| | | டபள் கெப் (4WD –AC) | 02 | |
| Lot 02 | குருநாகல் பிரதேச அலுவலகம் | டபள் கெப் (4WD –AC) | 01 | ரூபா 57,000.00 |
| Lot 03 | வவுனியா பிரதேச அலுவலகம் | டபள் கெப் (4WD –AC) | 01 | ரூபா 57,000.00 |

2. பெறுகைகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும். உத்தேச சேவைக் காலம் ஒரு வருடமாகும்.
3. ஆர்வமுள்ள மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-2034338 தொலைபேசி இலக்கத்தில் அல்லது renuka@sarp.lk எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 80/5, கொவிஜன மந்திரய, சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-10-18ஆம் திகதி முதல் 2022-11-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியும் மற்றும் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையொன்றினுள் இட்டு 2022 நவம்பர் 8ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு முகவரியிட்டு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 80/5, கொவிஜன மந்திரய, சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் முதல் 2023 பெப்ரவரி 7ஆம் திகதி வரையில் அல்லது கொள்வனவாளரால் நீடிக்கப்படும் காலம் வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் (குறிப்பீட்டிலக்கம்) குறிப்பிடுதல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**கருத்திட்டப் பெறுகைக் குழு,**
**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்,**
**80/5, கொவிஜன மந்திரய,**
**ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**

## இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு

### சுகாதார அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பின் திருத்தம் பற்றிய அறிவித்தல்

### HSEP/PIU/SP/W17/01/2022 - சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் W17 கேகாலை மாவட்ட சிவில் வேலைகளுக்கான பெறுகை – சுற்று – 2

மேற்படி தலைப்பின் கீழ் 2022 ஒக்டோபர் 14ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் 20ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் 8ஆம் விடயத்தின் கீழ் வரும் மீளளிக்கப்படாத கட்டணம் 12,500.00 ரூபா எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

**தலைவர் / செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு-08, இலங்கை.**

**சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

LANKA

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### (சுத்திகரிப்பு பணிமனை)

### பொதுக்கேள்வி 4447T

### SUPPLY OF SEAMLESS LINE PIPE

விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2022 நவம்பர் 14 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்தலாம்.

www.ceypetco.gov.lk & www.dqmarket.com ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2022 நவம்பர் 16 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**

தொலைபேசி : 0094-11-2400110
மின்னஞ்சல் : **ref.materials@ceypetco.gov.lk**

### பெயர் மாற்றம்

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் கொலன்னாவ 510 மீதொட்டமுல்ல கிராம சேவக பிரிவில் 57/C, மீதொட்டமுல்ல வீதி, கொலன்னாவ பிரதேசத்தில் வசிக்கும் சிவனடியன் சந்திரகுமாராகிய நான் எனது பெயரை அதிவணக்கத்துக்குரிய பிதா சிவனடியன் சந்ரு பெர்ணான்டோ என பெயர் மாற்றம் செய்கின்றேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**அதி வணக்கத்துக்குரிய பிதா**
**சிவனடியன் சந்ரு பெர்னான்டோ**

### பெயர் மாற்றம்

மாத்தளை தும்கொளவத்த மாத்தளைவத்த இல. 40/42,ஐ சேர்ந்த மொஹம்மட் துவான் ஜெமில் பாத்திமா ஸெய்னம் ஆகிய நான், எனது பெரை மொஹம்மட் துவான் ஜமீல் பாத்திமா ஸெய்னப் (ZAINAB) என பெயர் மாற்றம் செய்துள்ளேன் எனவும் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.
தே.அ.அ.இ. 200251902015

**- மொஹம்மட் துவான் ஜமீல் பாத்திமா ஸெய்னப்**

### பெயர் மாற்றம்

நுவரெலிய மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலக பிரிவில் பிரவுன்லோ வத்த, 56ம் பிரிவு, மஸ்கெலிய என்ற முகவரியில் வசிக்கும் கங்கன் மோகன் என்ற பெயரில் அறியப்பட்ட நான் இன்று முதல் மொஹொமட் மொஹீப் என்ற பெயரில் அழைக்கப்படுவதாக இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கி றேன்

**மொஹமட் மொஹீப்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# மாத்தளை மாநகர சபை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

மாத்தளை மாநகர சபைக்கு 2023ஆம் வருடத்தில் கீழே தரப்பட்டுள்ள விடயங்களின் கீழ் பொருட்கள் மற்றும் சேவை வழங்குர்நர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக தகைமை வாய்ந்த நிறுவனங்கள், நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு விடயத்தின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளுக்காக மீளளிக்கப்படாத 1150.00 ரூபா கட்டணத்தை (VAT) சகிதம் செலுத்தி (ஒரு உருப்படிக்காக 1000.00 ரூபா வீதம்) இயைபுடைய மாதிரிப் படிவத்தை மாத்தளை மாநகர சபை கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பொருட்கள் வழங்குதல்**

01. காகிதாதிகள்
02. நூலகப் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வாசிப்பு கிரந்தங்கள்
03. கணனிகள் மற்றும் கணனித் துணைப்பாகங்கள் டோனர், ரிபன், கார்ட்ரிச், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் உட்பட ஏனைய அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள்
04. சகல விதமான அலுவலக உபகரணங்கள் (மரத்தால் முடிவுறுத்தப்பட்டவை / இரும்பு மற்றும் உருக்கினால் முடிவுறுத்தப்பட்டவை)
05. கனரகப் பொருட்கள் (கம்பிகள், கம்பித் தூண்கள், இரும்புக் குழாய்கள், ஆணிகள், அஸ்பெஸ்டாஸ் சீமெந்து, சுண்ணாம்பு போன்றன)
06. கட்டிடப் பொருட்கள் (செங்கல், மணல், சிறு கற்கள், ABC, கற்தூள்கள், கிரவல்)
07. நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள்
08. முன்வார்ப்பு கொங்கிறீட் பொருட்கள் (ஹியூம் குழாய்கள், சிலிண்டர்கள், கொங்கிறீட் தூண்கள், கர்பிஸ்டோன், இன்டர்லொக்)
09. தார், கோலா (CSS1, CRS1, CRS2) கோல் மிக்ஸ் உட்பட வீதிகள் அமைப்பதற்கான மூலப் பொருட்கள்
10. பிளாஸ்டிக், பைபர், அலுமினியப் பொருட்கள் உட்பட உலோகப் பொருட்கள்
11. சகல விதமான விவசாய உபகரணங்கள் (மண்வெட்டி, வீச்சுக் கத்தி, முள்ளு, ரேக்கை, கடப்பாறை போன்றன)
12. நிறப்பூச்சு வகைகள், பொலிஷ் வகைகள், வார்ணிஷ், தினர் போன்றன
13. மட்பாண்ட (செரமிக்) உற்பத்திகள் (தரையோடுகள், குளியலறை துணைப்பாகங்கள் போன்றன)
14. மட்பாண்டம் மற்றும் கண்ணாடிப் பொருட்கள், கரண்டிகள், முட்கரண்டிகள் போன்றன
15. மரம் (அரியப்பட்ட மரம்)
16. தும்புத்தடி, ஈர்க்கிள் மற்றும் தூரிகைகள், மொப், சீலிங் மொப், பாய்கள், கால் துடைப்பங்கள் போன்றன
17. தும்பு மெத்தைகள், இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள்
18. மழை அங்கிகள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (கையுறைகள்/ பூட்ஸ்கள் / முகக் கவசங்கள்)
19. துப்புரவேற்பாட்டு இரசாயனப் பொருட்கள் சலவைத் தூள், சுத்திகரிப்புத் தூள், கிருமிநாசினிகள், ஹார்பிக், குப்பை சேகரிக்கும் உறைகள் மற்றும் பொலித்தீன் உறைகள்
20. மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (மின் குமிழ்கள், சுவிட்ச்கள், கேபள்கள் மற்றும் ஏனைய மின்சார உபகரணங்கள்
21. மின்னுயர்த்திகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல்
22. மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்
23. நீர்ப் பம்பிகளை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்
24. தீயணைப்பு உபகரணங்கள்
25. உராய்வுநீக்கி எண்ணெய்கள் மற்றும் வாகனம் சேர்விஸ் செய்யும் நிலையத்திற்குத் தேவையான கழுவும் பொருட்கள்
26. குளிர்சாதனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், நீர் வடிகட்டிகள் மற்றும் ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் முறைமைகளை வழங்குதல்
27. வளிச்சீராக்கி இயந்திரங்களை (கட்டிடங்களுக்காக) வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்
28. வளிச்சீராக்கி இயந்திரங்களை (வாகனங்களுக்கு) வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்
29. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள், மற்றும் நிறுவன அடையாள அட்டைகள்
30. ஆயுர்வேத மருந்துகள் மற்றும் மூலிகைத் தாவரங்கள் போன்றன
31. சகலவிதமான மருத்துவ உபகரணங்கள்
32. மருந்து உறை வகைகள்
33. கார்பட், நுளம்பு வலைகள், ரெக்ஸின், செருப்புகள், தொப்பிகள், கையுறைகள், கட்டில் விரிப்புகள் மற்றும் சகல விதமான துணிகளை வழங்குதல்
34. சகல விதமான பைகளை வழங்குதல் (அலுவலகப் பைகள், பிரிவ் கேஸ்கள், பாடசாலைப் பைகள், தோற் பைகள்)
35. சீருடைகளுக்கான துணிகள், உத்தியோகபூர்வ இலச்சினைகள், பொத்தான்கள், தோற் பட்டிகள் போன்றன
36. சீருடைக்கான காலணிகள்
37. கட்டிடங்களுக்கு திரைச்சீலைகளைத் தைத்து பொருத்துதல்
38. கொடிகள் மற்றும் பதாகை வகைகள்
39. வாகன உதிரிப்பாகங்கள்
40. டயர்கள், டியூப்கள், பெட்டறிகள்
41. வாகனங்களை வழங்குதல்
42. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
43. சிறுவர்களுக்கான பரிசுப் பொருட்களை வழங்குதல்
44. தகனச்சாலைக்கான எரிவாயு, எரிவாயு அடுப்புகள்
45. ஒட்சிசன் (பொறிமுறை வேலைத்தளத்திற்கு) வழங்குதல்
46. உயிரியல் வாயு பிரிவிற்கான சாணம் வழங்குதல்
47. கொம்போஸ்ட் உரம் பொதியிடுவதற்கான சூழலுக்கிசைவான உறைகளை வழங்குதல் (உக்கிப் போகும் பொலித்தீன் உறைகள் மற்றும் பிரதியீடு உறைகள்)
48. தொலைபேசிகள், உள்ள தொலைபேசி முறைமைகளை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்

**பராமரிப்புகள் மற்றும் சேவைகள்**

01. கட்டிடங்கள், வீதிகள், வடிகான் முறைமைகள் மற்றும் ஏனைய நிர்மாணங்களை செய்தல் மற்றும் பராமரித்தல்
02. அச்சு வேலைகள், அழைப்பிதழ்கள், டிஜிட்டல் பதாகைகள் தயாரித்தல், புகைப்படமெடுத்தல்
03. அலுவலகப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. கணனி மற்றும் அச்சுப் பொறிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
05. புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ரிசோ, தொலைநகல் இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
06. சகல மின் உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
07. CCTV கமரா முறைமையை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்
08. கணனி வலையமைப்பிடல் (Networking) கணனி நிகழ்ச்சித்திட்ட (Programming) வேலைகள்
09. வளிச்சீராக்கி இயந்திரங்கள், மின் விசிறிகள், மின் பிறப்பாக்கி இயந்திரங்கள், குளிர்சாதனங்கள் மற்றும் நீர்ப் பம்பிகளின் திருத்தவேலைகள்
10. மின்பிறப்பாக்கி, நீர்ப் பம்பிகள் (வாகனம் சேர்விஸ் செய்யும் நிலையத்திற்கு), வாகனம் சேர்விஸ் செய்யும் உபகரணங்களை வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள்
11. மின்னுயர்த்திகளின் திருத்தவேலைகள்
12. சிற்றுண்டிகள், மென்பானங்கள், பால் பக்கெட்டுகள், நீர் போத்தல்கள், சமைத்த உணவுகள் மற்றும் உணவு வழங்கும் சேவைகளை வழங்குதல்
13. கதிரைகள், மேசைகள், தற்காலிக தகர மறைப்புகள் (ஹட்), கூரைத் தகடுகள், கூடாரங்கள் மற்றும் உற்சவப் பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
14. ஒலிபெருக்கி முறைமைகள் மற்றும் மேடை ஒளியலங்கார முறைமைகளை வாடகைக்கு வழங்குதல்
15. டயர்களை மீள நிரப்புதல், சக்கர நடுநிலையாக்கம் மற்றும் சக்கர சமநிலையாக்க சேவைகள்
16. வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் (கார், வேன், கெப், லொறி, தீயணைப்பு வாகனம், நோயாளர் ஊர்திகள், டிராக்டர், கம்பெக்டர், பகோ இயந்திரங்கள், கல் உருளைகள் போன்றன)
17. பிரஷர் ஹோஸ் தயாரித்தல் மற்றும் ஹைட்ரோலிக் ஹோஸ் திருத்தவேலைகள்
18. வாகன டிங்கரிங் வேலைகள், ஸ்பிறே வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள்
19. கடைசல் பட்டறை வேலைகள்
20. குஷன் வேலைகள் (வாகனங்களுக்கு)
21. வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்
22. வாகனங்களுக்குத் தேவையான கட்புல, செவிப்புல உபகரணங்களைப் பொருத்துதல் (வானொலி, தொலைக்காட்சி, கஸெட், ரிவர்ஸ் கமரா)
23. வாகன வளிச்சீராக்கி முறைமைகளின் திருத்தவேலைகள்
24. சலவையக சேவைகள்
25. பாவித்த டயர்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கொண்டு செல்லல்
26. பாவித்த வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கொண்டு செல்லல்
27. அலுமினிய துணைப்பாகங்களைப் பொருத்தும் சேவைகள்
28. பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்
29. வாகன பராமரிப்பு வேலைகள்
30. மலசலகூடங்களை சுத்தம் செய்தல்
31. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுவதற்காக மரம் வெட்டுவோர் / நிறுவனங்கள்
32. நில அளவை சேவைகள் (சபைக்குரித்தான காணிகளை அளக்கும் வேலைகள்)
33. கல் உடைப்பவர்கள்
34. நிலச் சீராக்கப் பொருட்கள் (புல் பற்றைகள், மரங்கள், கன்றுகள், தும்பு நார்கள், பூச்சாடிகள், தோட்டக் கத்தரிக்கோல் போன்றன)
35. கதிரை இழைத்தல் / நிறப்பூச்சு பூசுதல் / பொலிஷ் இடுதல் / வார்ணிஷ் பூசுதல் / ரெக்ஸின் மற்றும் போர்மிகா இடுதல்
36. கறையான் கட்டுப்பாட்டுக்கான இரசாயன திரவங்களை விசிறுதல்

வழங்கல் மற்றும் சேவைகளின் பொருட்டு ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்காக விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு வைகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். உத்தேச விண்ணப்பதாரர்கள் தாம் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளும் சகல விண்ணப்பதாரர்களும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் மற்றும் கூட்டிணைப்புச் சான்றிதழ் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

VAT பதிவு இருக்குமானால் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கட்டிடங்கள், வீதிகள், வடிகான்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புகளுக்கு CIDA நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட அல்லது வேறு நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட நாளது தரவேற்றம் செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

கொடுப்பனவை காசோலை மூலம் செலுத்துவதானால் மாநகர ஆணையாளர், மாநகர சபை, மாத்தளை எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் மாநகர சிறாப்பரிடம் பணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்களால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, மாத்தளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரர்களின் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தொலைபேசி இலக்கம்: 066-2222275

**யுரேஷ் நிஷாந்த மாதுவகே,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை - மாத்தளை.**

**2022-10-13ஆம் திகதி,**
**மாத்தளை மாநகர சபை அலுவலகத்தில்.**

# தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2023

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்திற்கு 2023ஆம் வருடத்திற்காக தேவைப்படும் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு பெறுவதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள், கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வெளி நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த பொருட்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு A மற்றும் B எனும் இரு வகுதிகளின் கீழ் பதிவு செய்யப்படும். A வகுதியின் கீழ் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் B வகுதியின் கீழ் நாடு முழுவதிலும் அமைந்துள்ள நிறுவனங்கள் பதிவு செய்யப்படும்.

பின்வரும் மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2022-11-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், தேசிய சுகாதார நிறுவனம், களுத்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்கான விண்ணப்பங்களுடனும் பதிவுக் கட்டணமாக எண்ணூறு ரூபாவை (800.00 ரூபா) பணிப்பாளர், தேசிய சுகாதார நிறுவனம், களுத்துறை எனும் பெயரில் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவங்களின் பொருட்டும் 800.00 ரூபா வீதம் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

**பணம் செலுத்துதல்:**

இலங்கை வங்கி, களுத்துறைக் கிளையில் 7040233 எனும் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டமைக்காக வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை (பணம் செலுத்தப்பட்டமைக்காக வங்கியின் முத்திரை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்) இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது இவ்வலுவலகத்திற்கு நேரில் சமுகம் தந்து பணக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**A வகுதி – (பிராந்திய வழங்குநர்களைப் பதிவு செய்தல் களுத்துறை மாவட்டத்திற்குள்)**

இல. வகை

1. பாவனைப் பொருட்கள் மற்றும் சுகாதார உபகரணங்கள் (தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகை, இறப்பர் உற்பத்திகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் போன்றன)
2. டயர், டியூப் மற்றும் பெற்றரி / ஏனைய வாகன உதிரிப்பாகங்கள் போன்றன
3. துணி வகைகள், படுக்கை விரிப்புகள், கதவு, ஜன்னல் திரைச்சீலைகள், தலையணைகள், மெத்தைகள் போன்றன.
4. திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள்
5. மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
6. கட்டிடப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் (குழாய்கள், மின்சாரம் மற்றும் ஏனையவை)
7. குளிர்சாதனப்பெட்டி, வளிச்சீராக்கி, மின் உபகரணங்களின் சேவை மற்றும் பராமரிப்பு
8. கணனி இயந்திரங்கள் / தட்டச்சு இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல்
9. சகல வகையான வாகன திருத்தவேலைகளைச் செய்யும் நிறுவனங்கள் (கராஜ்)
10. வாகனங்களின் வளிச்சீராக்கம் மற்றும் வளிச் சீராக்க திருத்தவேலைகள்
11. சகல வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
12. வாடகை அடிப்படையில் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (திரிபோஷ மற்றும் ஏனைய பொருட்களுக்கான போக்குவரத்து லொறி/ வேன்/பஸ்)
13. புத்தகங்கள் அச்சிடல் மற்றும் ஏனைய அச்சு வேலைகள் (டிஜிட்டல் அச்சு வேலைகள் போன்றன)
14. மருந்துகளை உள்ளிடும் உறைகளை வழங்குதல் (3x4 அங்குலம்)
15. உணவு பானங்களை வழங்குதல் (உணவுப் பொதிகள், சிற்றுண்டிகள், பானவகைகளை வழங்குதல்)
16. அழுக்குத் துணிகளை சலவை செய்தல்

**B வகுதி – (திறந்த வழங்குநர்களைப் பதிவு செய்தல் - நாடு முழுவதும்)**

இல. வகை

17. அலுவலக காகிதாதிகள் / கணனி காகிதாதிகள் (டோனர்/ ரிபன்)
18. அலுவலக உபகரணங்கள் (கணனிகள், கணனி துணைப்பொருட்கள், தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கூட்டல் இயந்திரம் போன்றன)
19. அலுவலகத் தளபாடங்கள் (மர கபர்ட் / உருக்கு கபர்ட் / கதிரை மேசைகள் போன்றன)
20. ஆய்வுகூடப் பொருட்கள்
21. ஆய்வுகூட உபகரணங்கள்
22. மருத்துவ உபகரணங்கள்
23. பற்சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
24. கட்புல செவிப்புல உபகரணங்கள்
25. நீர்ப் பம்பி உபகரணங்களின் திருத்தவேலைகள்
26. மின் அடுப்புகள் / எரிவாயு குழாய்களை சேவை செய்தல்
27. கட்புல, செவிப்புல உபகரணங்களின் திருத்தவேலைகள்
28. கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் (C9 அல்லது அதற்கு மேற்பட்ட இக்டாட் பதிவு)
29. மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல்
30. வளிச் சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023**
**தேசிய சுகாதார நிறுவனம், களுத்துறை**
**(A4 அளவான தாளில் விண்ணப்பங்களைத் தயார் செய்தல் வேண்டும்)**

01. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி:
02. வியாபார உரிமையாளரின் பெயர்:
03. பதிவிலக்கம் (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்):
04. தொலைபேசி இல. தொலைநகல் இல. மின்னஞ்சல்.
05. வெட் வரி செலுத்துபவராயின் அதன் இலக்கம் (பிரதியை இணைக்கவும்):
06. விண்ணப்பிக்கும் இலக்கம் மற்றும் விடயம்: (மேற்படி இல. 01 முதல் 30 வரை):
07. முன்னைய சேவை மற்றும் வழங்கல் தொடர்பான விபரங்கள்:
08. களஞ்சிய வசதிகள் உண்டா? ஆம்/இல்லை
09. சேவை தேர்ச்சி மற்றும் அனுபவம் தொடர்பான விபரங்கள்:
10. ஏனைய விடயங்கள்:

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

**திகதி:..................................** **உரிமையாளரின் கையொப்பம் (உத்தியோகபூர்வ முத்திரை)**

**நிபந்தனைகள்**

1. வழங்குநர்களைப் பதிவு செய்தல் தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டிருக்கும்.
2. பதிவு பெற்ற வழங்குநர்கள் பட்டியலிலிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் நிறுவனத்தின் தேவையின் பொறுத்து வெளி வழங்குநர்களிடமிருந்தும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை தேசிய சுகாதார நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.
3. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிறுவனத்தின் அறிவித்தலுக்கமைய விலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு கட்டுப்படல் வேண்டும்.
4. பொருட்களை வழங்குவதற்கு முன் குறித்த பொருட்களின் மாதிரிகள் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தேவையாயின் அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. தருவித்தற் கட்டளைகள் வழங்கப்பட்ட பின் வழங்குநர்கள் அனைத்து வழங்கல்களையும் தேசிய சுகாதார நிறுவனத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம்,**
**களுத்துறை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

afc
தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.07.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 27.10.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
722, கோட்டை வீதிஇராஜகிரிய
27.10.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

# ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் – 2023

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை 2022ஆம் வருடத்தில் வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவுசெய்துகொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ **பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கல்**

01. சகலவகையான அலுவலக காகிதாதிகள், அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள், படிவங்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல்
02. சகல வகையான அச்சுவேலைகள்
03. அலுவலக மரத் தளபாடங்கள், உருக்கு வீட்டுபயோகப் பொருட்கள்
04. கணனிகள் /கணனிமென்பொருள் மற்றும் டோனர் வகைகளை வழங்குதல்
05. டிஜிட்டல் அறிவித்தல்களை அச்சடிப்பவர்கள்
06. சகல சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
07. மின் உபகரணங்கள் மற்றும் வீதிவிளக்கு உபகரணங்கள்
08. கிருமி நாசினிகள், பீடைநாசினிகள் மற்றும் உர வகைகள்
09. சகல வகையான ஹியூம் குழாய்கள், கம்பி தூண்கள் வழங்குதல்
10. சகலவகையான நிறப்பூச்சுகள்
11. சீருடைக்கான துணிகளை வழங்குதல்
12. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
13. முன்பள்ளி உபகரணங்கள்
14. தார் (வீதி அபிவிருத்திக்காக)
15. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வழங்குதல்
16. சகல வகையான டயர் மற்றும் டியூப் மற்றும் பெட்டறி/டயர் மீள் நிரப்புதல்
17. வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல்
18. சகல வகையான கட்டிடப் பொருட்களை வழங்குதல்

❖ **ஏனைய சேவைகள்**

19. வாகன திருத்தவேலைகளைச் செய்தல்
20. வாகனங்களைச் சேர்விஸ் செய்தல்
21. கணனி/தட்டச்சுப் பொறி/தொலைநகல் இயந்திரம் /நகல் பிரதி இயந்திர திருத்தவேலைகள்
22. உருக்கியொட்டுநர்கள்
23. நில அளவை வேலைகள்
24. பெயர்ப் பலகைகள் /பனர்களை வரைதல் /ஞாபகச் சின்னங்களைத் தயாரித்தல்
25. பாவித்த புதினப் பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை கொள்வனவு செய்தல்
26. அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்தும் வேலைகள்
27. அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகளைச் செய்தல்
28. வாடகை அடிப்படையில் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
29. சட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட ஆலோசனைகள் / மொழிபெயர்ப்புகள்
30. அரிவாள், மண்வெட்டி போன்ற ஆயுதங்களின் திருத்தவேலைகள் மற்றும் கொள்வனவு செய்தல்

**அட்டவணை 01**

❖ **நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்**

| | ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | 100,000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள் | 1000.00 |
| 2. | 100,000.00 முதல் 250,000.00 ரூபா வரை | 2000.00 |
| 3. | 250,000.00 முதல் 500,000.00 ரூபா வரை | 2500.00 |
| 4. | 500,000.00 முதல் 1,000,000.00 ரூபா வரை | 3000.00 |
| 5. | 1,000,000.00 ரூபாவுக்கு மேல் | 3500.00 |

வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு வெவ்வேறான விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை www.facebook.com/ Arachchikattuwa Pradeshiya Sabha எனும் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் facebook கணக்கிலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். இல. 1 முதல் 30 வரையான விடயங்களின் பொருட்டு ஒரு விடயத்திற்கான பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் விண்ணப்பப் படிவங்களை, தம்மிடமுள்ள தகைமை மற்றும் அனுபவங்களை நிரூபிப்பதற்காக ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்தை செயலாளர், ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் பெயருக்கான காசோலை அல்லது காசுக் கட்டளையை 2022.11.30ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2023 எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைக் கோரி தகைமை வாய்ந்தவர்களைத் தெரிவுசெய்து வழங்கல் சேவை மற்றும் வேலைகளை நிறைவேற்றுவதற்கு செயற்படும் அதேவேளை தேவையானபோது அதற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையை ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கம் ஊடாக வழங்கல் அதிகாரியிடமிருந்து விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**கே. தட்சணாமூர்த்தி,**
**தலைவர்,**
**பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ.**

**தொலைபேசி இலக்கம்**
**அலுவலகம் - 032-2259783**
**வழங்கல் அதிகாரி – 0773564110.\. 0717464110**

2022.10.18

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வருமானத்தினால் நிதியிடப்படுகிறது

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### ஒரு வருட காலத்திற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (2022/2023)

1. மேற்குறிப்பிடப்பட்ட விடயத்திற்காக தகுதி மற்றும் தகைமைகளை முழுமையாக பூர்த்தி செய்துள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவு பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இங்கு பெக்கோ லோடர் மற்றும் நீர் பவுசர்கள் என இரு ஒப்பந்தங்கள் உள்ளன என்பதுடன் விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது இரண்டிற்கும் தனித்தனியாக விலைக்கோரலாம். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | வாகனத்தின் வகை | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான தூரம்/ கி.மீ. | ஒரு வாகனத்திற்கான விலைக்கோரல் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | நீர் பவுசர்கள் - CEK | RDA/EOM&M/PRC/2022/MNT/19 | 03 | 2500 மற்றும் 2750 | 50,000.00 |
| 02 | பெக்கோ லோடர் - CEK | RDA/EOM&M/PRC/2022/MNT/20 | 01 | ஒரு வருடத்திற்கு 1200 மணித்தியாலம் | 25,000.00 |

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 038-2289122 தொலைநகல்: 038-2289560) என்பதுடன் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-10-18ஆம் திகதியிலிருந்து 2022-11-01ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபா + **150.00** (பெசேவ) ரூபாவைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு (EMO&M) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
4. விலைமனுக்களை 2022.11.01ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைமனுக்கள் 2023-01-31ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுப் பிணை முறி 2023-02-28ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக் குழு,
மே/பா பணிப்பாளர் (**EMO&M**) பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## இப்பாகமுவ பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான நிகழ்வு வரவு செலவுத் திட்ட அறிக்கை

இப்பாகமுவ பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான குறை நிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை 2022 ஒக்டோபர் 18 முதல் 2022 ஒக்டோபர் 26ம் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினம் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளாதாக பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு அமுல்படுத்தும் விதிகளின் 10,2 (ஆ) விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**2022 ஒக்டோபர் 17ஆம் திகதி**
**இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகம்**
**இப்பாகமுவ**

**அஜித் குமார் விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**இப்பாகமுவ பிரதேச சபை**
**இப்பாகமுவ.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்ட அமைச்சு

சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## Auxiliary Cane Carrier Chain Links மற்றும் துணைக்கருவிகளுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

(**PR – 7424**)

செவனகல பிரிவுக்கு Auxiliary Cane Carrier Chain Links மற்றும் துணைக்கருவிகளின் வழங்கலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 இலங்கை ரூபாவை செலுத்தி 2022 நவம்பர் 9ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 நவம்பர் 10 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, பதிவுத் தபால், விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Auxiliary Cane Carrier Chain Links மற்றும் துணைக்கருவிகளுக்கான கேள்விமனு - (PR – 7424)" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் விலைமனு திறக்கப்படுவதில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியான இலங்கை ரூபா 450,000.00 (நானூற்று ஐம்பதாயிரம் மாத்திரம்) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்பட்ட செலவு 30 மில்லியன் இலங்கை ரூபா.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச) (SLTB)

### Bid for the supply and delivery of New Radial Tube type and Radial Tubeless type Tyres
### Procurement No.: SLTB/TS/GEN/65/2023

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2022.11.09 ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரை வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகளுக்கு இணங்கும் வகையில் புதிய Radial Tube type and Radial Tubeless type Tyres ஆகியவற்றின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இபோச பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை, கேள்விச் சபையின் செயலாளரிடமுள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2022.10.18 ஆம் திகதியிலிருந்து 2022.11.08 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான 10,000 ரூபாவை செலுத்திய பின்னர், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் விலைமனுக் கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| விளக்கம் | விலைமனுப்பிணை(ரூ) |
|---|---|
| Supply & delivery of –<br>(i) 96 Nos. 10R20 New Radial Tube Tyres<br>(ii) 480 Nos. 10R22.5 New Radial Tubeless type Tyres<br>(iii) 72 Nos.12R22.5 New Radial Tubeless type Tyres on 30 days credit | For Bids offering<br>Tyre Type (i) only 200,000<br>TyreType (ii) only 800,000<br>Tyre Type (iii) only 150,000<br>All 03 Types 1,150,000 |

2. இலங்கை சந்தையில் முன்வைக்கப்பட்டுள்ள ரயர்களின் உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் ரயர்களின் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள் அல்லது தர அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவைச் சமர்ப்பிக்கும் தகைமையைப் பெறுவர்.
3. உள்ளூர் முன்னுரிமையானது விலைமனுவை மதிப்பீடு செய்யும் காரணியாகும்.
4. விலைமனுக்கள் 2023.02.10 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து ஒருவருடத்திற்கு குறிப்பிடப்பட்ட விலைகள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. இபோச இனால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பக்கூடாத மற்றும் நிபந்தனையின்றி பணமாக மாற்றக்கூடியதுமானதும் உத்தரவாத பாங்கொன்றில் அமைந்ததும் இலங்கை மத்தியவங்கியில் பதிவுபெற்றதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து அல்லது புகழ்வாய்ந்த நிதியிடல் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டதுமானதும் 2023.03.10 ஆம் திகதிவரையும் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதுமான விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ளவகையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதமொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பொறிக்கப்படல் வேண்டும்.

(அ) எந்தவொரு நபரும் விலைமனுதாரரொருவரின், முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம், கொழும்பு-10, டி.ஆர். விஜயவர்தன மாவத்தை, ''சமாகம் மெதுர'',பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்தவுடனேயேயும் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்பும் விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்தச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்படமாட்டாது.

6. விலைமனுக்கள் ஒன்றில் இந்த அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக பேணப்படும் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவின் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' ஆகியன தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு விலைமனு அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் "Supply & delivery of New Radial Tube type and Radial Tubeless type Tyres" எனகுறிப்பிடப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2022.11.09 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மூடப்பட்டு, கொழும்பு-05, கிருளபாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் கேள்விப் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல.: 200,கிருளபாதை,**
**கொழும்பு - 05.**

விசாரணைகள் : செயலாளர், இபோசபெறுகைக் குழு.
தொலைபேசி : 0117706115, 0117706110. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457

**பின்வருவனவற்றை தயவுசெய்து கவனிக்கவும்:**
இபோச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக,தயவுசெய்து https://sltb.lk என்ற இணையத்தையும் https://promise.lk என்ற இணையத்தையும் பார்வையிடவும்.




# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

## ஸ்பிரிங் பிளேட்டுக்களின் வழங்கலுக்கான விலைமனு

### SLTB/TS/GEN/Spring Blades/2023

1. ஸ்பிரிங் பிளேட்டுக்களின் உற்பத்தியாளர்கள் / உற்பத்தியாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து ஸ்பிரிங் பிளேட்டுக்களின் வழங்கலுக்காக 2022.11.09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் இபோச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2022.10.18 ஆம் திகதியிலிருந்து 2022.11.08 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| ஆகக் குறைந்தது 30 நாட்கள் கடன் அடிப்படையில் ஒரு வருடத்திற்காக இபோச பஸ் கூட்டத்திற்காக தேவைப்படும் ஸ்பிரிங் பிளேட்டுக்களை வழங்கல் | 2,000,000 |

2. ஒம்னி பஸ்களின் ஸ்பிரிங் பிளேட்டுக்களுக்கான உற்பத்தியாளர்கள் / உற்பத்தியாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்வர். ஒம்னி பஸ்களின் ஸ்பிரிங் பிளேட்டுக்களை உற்பத்தி செய்வதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தை உற்பத்தியாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
3. உள்ளூர் முன்னுரிமை விலைமனு ஒன்றிற்கான மதிப்பிடல் காரணியாகும்.
4. விலைமனுக்கள் 2023.02.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து ஒரு (1) வருடத்திற்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2023.03.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகுந் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
6. (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின், பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்பட மாட்டாது.
7. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
8. 2022.11.09ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Spring Blades" என குறிப்பிடப்படல் வேண்டும்.
9. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்தின் இபோச பெறுகை குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**

**விசாரணைகள்:** செயலாளர், இபோச பெறுகைக் குழு.
தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/ தொலைநகல்:011 2588457

**பின்வருவனவற்றை தயவு செய்து கவனிக்கவும்:**
இபோச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக, தயவு செய்து **https://sltb.lk** என்ற இணையத்தையும் **https://promise.lk** என்ற இணையத்தையும் பார்வையிடவும்.

**சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்பு பணிமனை)**

**பொதுக்கேள்வி 4444T**

**SUPPLY OF HEAT EXCHANGER TEST RINGS**

விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2022 நவம்பர் 14 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்தலாம்.

www.ceypetco.gov.lk & www.dqmarket.com ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2022 நவம்பர் 16 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**

தொலைபேசி : 0094-11-2400110
மின்னஞ்சல் : **ref.materials@ceypetco.gov.lk**

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இல.: **11/9/2/ඉඩම්ගැනීම් අංශ/C9**

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2021/UD/49

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2293/32ஆம் இலக்க 2022-08-17 ஆம் திகதிய அதிவிசேட வத்தமானியின் பகுதி III ஐப் பார்க்க.

**அட்டவணை**

1. மாகாணம் : வட மத்திய மாகாணம்
2. மாவட்டம் : அநுராதபுரம்
3. பிரதேச செயலாளர் பிரிவு : கிழக்கு நுவரகம் பலாத்த
4. கிராம உத்தியோகத்தர் பிரிவு : இல. 245- வன்னியன்குளம் பகுதி IV.
5. கிராமம் : வன்னியன்குளம்,
6. வரைபட இல : இறுதிக் கிராம வரைபட இல.259.(பிற்சேர்க்கை இல.181,தாள்இல. 183).
7. துண்டு இல.
துண்டு இல. 2517, 2520, 2521, 2522, 2523, 2525, 2526, 2527, 2528, 2533, 2535, 2536, 2542, 2543, 2547, 2548, 2550, 2551, 2552, 2553, 2554, 2555, 2556, 2561, 2562, 2564, 2565, 2566, 2571, 2572, 2573, 2575, 2576, 2578, 2579, 2580, 2581, 2582, 2583, 2585, 2586, 2587, 2589, 2590, 2591, 2592, 2594, 2595, 2596, 2597, 2599, 2601, 2602, 2604, 2605, 2607, 2609, 2610, 2611, 2612, 2615, 2622, 2623, 2624, 2627, 2628, 2629, 2630, 2631, 2632, 2634 (71 காணித் துண்டுகள்).
8. முழு விஸ்தீரணம் : 0.415 ஹெக்டயார்.

**ஈ.எம்.ஆர்.பீ.பி. ஏக்கநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவு, அநுராதபுரம்**

**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலகம், அநுராதபுரம்.**
**2022/10/14**

---

**சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்பு பணிமனை)**

**பொதுக்கேள்வி 4448T**

**SUPPLY OF FINNED TUBE**

விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2022 நவம்பர் 14 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்தலாம்.

www.ceypetco.gov.lk & www.dqmarket.com ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2022 நவம்பர் 16 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**

தொலைபேசி : 0094-11-2400110
மின்னஞ்சல் : **ref.materials@ceypetco.gov.lk**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கல்வி அமைச்சு**

**உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு Ink, Glue, Stitching Wire & Strapping Roll ஆகியவற்றின் வழங்கலுக்கான பெறுகை**

**IFB:ED/07/101/15/2022/INCL/03(SPC)**

1. உள்ளூர் முகவர்களினூடாக இந்திய கடன் வரிசையின் கீழ் கல்வி அமைச்சின் பாவனைக்கு **Ink, Glue, Stitching Wire & Strapping Roll** ஆகியவற்றின் வழங்கலுக்கான பெறுகைக்காக, கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 4 இலிருந்து 6 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் பின்வரும் அம்சங்களுக்காக விலைகளை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொகுதி இல. | அம்சத்தின் விளக்கம் | விலைமனுப்பிணையின் தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| Lot-A | Glue | 320,000 |
| Lot-B | Ink | 1,120,000 |
| Lot-C | Wire Stitching | 100,000 |
| Lot-D | Strapping | 70,000 |

விலைமனுதாரர் விலைமனுவுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதியிலுள்ளவாறான விலைமனுப்பிணைகளை வழங்கல் வேண்டும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி அமைச்சின் 'இசுறுபாய', 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141-50 நீடிப்பு 1530) 2022 நவம்பர் 08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று மதியம் 12 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. 2022 நவம்பர் 3 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 21,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகைக் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. 2022 நவம்பர் 9 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஆகியன அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of supply of Ink, Glue, Stitching Wire & Strapping Roll for the use of Ministry of Education under the Indian Line of Credit through local Agents IFB:ED/07/101/15/2022/INCL/03(SPC).**

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய", பத்தரமுல்ல.**

---

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலத்தில் காணப்படும் அனைத்து கணினி மற்றும் கணினி அச்சு இயந்திர சேவையிடல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் காணப்படும் கணினிகள் மற்றும் கணினி அச்சு இயந்திரத்தினை புதுப்பிப்பதற்கான விலைமனுக்கோரல் - 2022/2023**

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலத்தில் காணப்படும் அனைத்து கணினி மற்றும் கணினி பாகங்களை பழுது பார்த்தல் அல்லது புதுப்பித்தல் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் காணப்படும் கணினிகள் மற்றும் கணினி அச்சு இயந்திரங்களை புதுப்பிப்பதற்காக திணைக்களத்தின் பெறுகைக் குழுவினால் தகுதிவாய்ந்த நிறுவனங்களின் தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கள் (NCB) கீழ் தகுதி வாய்ந்த மனுதாரர்களினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**2022.11.09** ஆம் திகதி வார நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிக்குள் திணைக்களத்தின் காசாளரிடம் மீளப்பெற முடியாத **ரூ.2,000/-** கட்டணத்தைச் செலுத்திய இரசீதை வழங்கல் பிரிவில் சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ளலாம். மனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மனுப்பிணையாக **ரூ.15,000/ -** வினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மனு ஏற்றுக்கொள்ளல் **2022.11.10 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு நிறைவுபெறுவதுடன் மனுக்கள் உடனடியாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு பிரிவில் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.

தவைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
**இலங்கை மதுவரித் திணைக்களம்**
இல 353, கோட்டே வீதி,
இராஜகிரிய.
**2022.10.18**

---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பெருந்தோட்ட அமைச்சு**

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

**செவனகல சீனி தொழிற்சாலை - ஆலைகளுக்காக புதிய கிரீஸால் உராய்வு நீக்கல் முறைமை ஒன்றின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு – PR – 6499**

செவனகலவில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கான ஆலைகளுக்கு புதிய கிரீஸால் உராய்வு நீக்கல் முறைமை ஒன்றின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 8,000.00 இலங்கை ரூபாவை செலுத்தி 2022 நவம்பர் 9ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு-04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 நவம்பர் 10 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு-04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, பதிவுத் தபால், விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''செவனகல சீனி தொழிற்சாலை - ஆலைகளுக்கு புதிய கிரீஸால் உராய்வு நீக்கல் முறைமையின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான கேள்விமனு'' என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் விலைமனு திறக்கப்படுவதில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியான இலங்கை ரூபா 330,000.00 (முந்நூற்று முப்பது ஆயிரம் மாத்திரம்) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்பட்ட செலவு 22 மில்லியன் இலங்கை ரூபா.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு-04.**

---

**வனசீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்**

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

1. 2023ஆம் வருடத்தில் தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை மிருகக்காட்சிச்சாலை மற்றும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் வேலை வழங்குநர்களாக தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்பும் அரச திணைக்களங்கள், அரசுக்குச் சொந்தமான வர்த்தகப் பணிகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், புகழ்பெற்ற வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு பதிவு செய்வதாயின் ஒவ்வொரு பிரிவுக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு அனைத்து விண்ணப்பங்களும் ஒரு கடித உறையில் அதன் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023'' என்று குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவுக்காகவும் 500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் அறவிடப்படும். கட்டணம் ரொக்கப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். சிறாப்பர் கருமபீடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பணப்பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவத்தை பின்வரும் ஏதேனும் ஓர் இடத்திற்கு அனுப்புதல் வேண்டும்.
4. விண்ணப்பத்துடன் இணைத்து அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்,
   a. இயையுடைய துறையில் வர்த்தகப் பதிவின் உறுதி செய்யப்பட்ட பிரதி
   b. VAT பதிவின் உறுதி செய்யப்பட்ட பிரதி (பதிவு செய்யப்பட்டிருந்தால்)
   c. உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட முகவராயின் உற்பத்தியாளர்களின் அங்கீகாரம்
   d. (வேலைகளுக்காக) CIDA (ICTAD) பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி
   e. பஸ் வண்டிகளின் பதிவுச் சான்றிதழ் (16ஆம் இலக்க வகுதிக்குப் பொருந்தும்)
   f. ISO தரம் மற்றும் உணவுச் சான்றிதழ் (12ஆம் இலக்க வகுதிக்குப் பொருந்தும்)
5. 2023ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்படும் வழங்குநர்கள் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதி ஒன்றை வழங்க இணங்குதல் வேண்டும். குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதியை வழங்காத அல்லது பணப்பற்றுச்சீட்டு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட பிரதிகள் இன்றி கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
6. வழங்குநர்கள் இதற்கு முன்னர் திணைக்களத்தின் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
7. பின்வரும் முகவரிகளிலிருந்து விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு குறிப்பாக பின்வரும் இடங்களுக்கு அருகில் இருக்கும் வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.
   I. பிரதிப் பணிப்பாளர், தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலை, அநகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை தொ.பே. 0112712751
   II. பிரதிப் பணிப்பாளர், பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை, ரம்புக்கன தொ.பே. 0352266116
   III. பிரதிப் பணிப்பாளர், பின்னவலை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை, ரம்புக்கன தொ.பே. 0352266641
   IV. பிரதிப் பணிப்பாளர், ரிதியகம வனப் பயணப் பூங்கா, ருஹுணு ரிதியகம, அம்பலந்தோட்டை தொ.பே. 0473620410
8. அனைத்து விண்ணப்பங்களும் 2022 நவம்பர் 08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்**
**அநகாரிக்க தர்மபால மாவத்த,**
**தெஹிவளை**

---

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

---

# பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி பாதுகாப்பு சேவைக்காக கேள்வி பத்திரங்கள் கோரல்

கீழ்காணும் சேவைக்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கேள்விச்சபையின் தலைவரால் 2022 நவம்பர் மாதம் 16ம் திகதி மு.ப.10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே மு.ப.10..30 மணிக்கு கேள்வி பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் அல்லது அவரின் சார்பாக ஒருவர் கட்டாயமாக அன்றைய தினம் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

**02. தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விபரங்கள் பின்வருமாறு.**

(அ) பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் - 01

(ஆ) சிரேஷ்ட பாதுகாப்பு அலுவலர்கள் - 03

(இ) பாதுகாப்பு ஊழியர்கள் (ஆண்கள்) - 13

(ஈ) பாதுகாப்பு ஊழியர் (பெண்கள்) - 02

03. தெரிவு செய்யப்படும் கேள்வி மனுதாரர் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(அ) பாதுகாப்பு சேவை ஊழியர்கள் அனைவரும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டியதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களுக்கு தங்கள் நிறுவனத்தினால் கடமை பொறுப்பேற்க முன்னர் சீருடை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பிரதான பாதுகாப்பு அலுவலரும், சிரேஷ்ட பாதுகாப்பு அலுவலர்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) உணவும் தங்குமிட வசதியும் எந்தவொரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) பன்னிரண்டு (12) மணித்தியாலங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் இரண்டு (02) பணி சுழற்சிகள் இருக்க வேண்டும்.

(உ) தெரிவு செய்யப்படும் கேள்வி மனுதாரர் மீளளிக்கப்படும் ஒப்பந்த பணமாக ரூபா.1,000,000.00 னை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளர் நாயகத்திடம் வைப்பிலிட வேண்டும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட கேள்வி மனுதாரரின் சேவை ஒரு வருட காலம் மாத்திரமே (365 நாட்கள்)

(எ) இதைத் தவிர பாதுகாப்புச் சேவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை திருப்திகரமான முறையில் நிறைவேற்ற வேண்டும்.

04. சம்பள கட்டுப்பாட்டுச் சபை கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடைய மற்றும் திருப்திகரமான சேவை வரலாற்றைக் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

05. தங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வி மனுவை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான முழு அதிகாரமும் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கேள்வி மனு குழுவிற்கே உரித்தடையதாகும்.

06. கேள்விப் படிவத்தை மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு பணம் ரூபா 6000/= னை செலுத்தி ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளரிடம் 2022 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**பத்தனை.**

# நமீபியாவிடம் தோற்ற இலங்கை அணி கட்டாய வெற்றிக்காக இன்று களத்தில்

## அணியில் மாற்றங்கள் நிகழ வாய்ப்பு

டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்பப் போட்டியில் நமீபியாவிடம் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்த இலங்கை கட்டாய வெற்றிக்காக இன்று (18) ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்ளவுள்ளது.

ஆரம்ப சுற்றில் ஏ குழுவில் இருக்கும் இலங்கை தற்போது –2.750 நிகர ஓட்ட விகிதத்துடன் நான்காவது இடத்தில் காணப்படுகிறது. இந்நிலையில் இலங்கை அணி சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேற எஞ்சியுள்ள இரு ஆரம்ப சுற்றுப் போட்டிகளிலும் வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்துடனான இன்றைய போட்டி முதல் ஆட்டம் நடைபெற்ற அதே கார்டினியா பார்க், கீலொங் மைதானத்தில் பிற்பகல் 1.30க்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்படி இலங்கை அணி முதல் முறை மின்னொளியில் ஆடவுள்ளது.






இந்தப் போட்டிக்கான இலங்கை அணியில் மாற்றங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் முதல் போட்டியில் டக் அவுட் ஆன தனுஷ்க குணதிலக்க நீக்கப்பட்டு அவருக்கு பதில் சரித் அசலங்க அணியில் இடம்பெற வாய்ப்பு உள்ளது.

கடந்த டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக இருந்த சரித் அசலங்க அண்மைக் காலத்தில் சோபிக்கத் தவறி வருகிறார். இந்த சூழலிலேயே அவர் முதல் போட்டிக்கான பதினொருவர் அணியில் இடம்பெறவில்லை.

அதேபோன்று வேகப்பந்து வீச்சாளர் பிரமோத் மதுஷானுக்கு பதில் இன்றைய போட்டியில் லஹிரு குமார இடம்பெற வாய்ப்பு உள்ளது. அண்மைக் காலத்தில் உபாதைக்கு உள்ளாகி இருந்த குமாரவுக்கு நமீபியாவுக்கு எதிரான போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டது.

நமீபியாவுக்கு எதிரான மோசமான தோல்வியால் இலங்கையின் நிகர ஓட்ட விகிதமும் மிக மோசமாக இருப்பதால் எஞ்சிய இரு போட்டிகளிலும் அதிக இடைவெளியில் வெற்றி பெறுவது அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதில் தீர்க்கமாக இருக்கும். இல்லாவிட்டால் அடுத்த போட்டிகளின் முடிவில் இலங்கை அணி தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக ஏ குழுவில் நமீபியா மற்றும் இலங்கை அணிகள் தமது அடுத்த இரண்டு போட்டிகளிலும் வென்றாலேயே இலங்கை அணி நிகர ஓட்ட விகித பிரச்சினை இன்றி அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று காலை 9.30 மணிக்கு கீலொங் மைதானத்தில் நடைபெறவுள்ள நெதர்லாந்து மற்றும் நமீபிய அணிகளுக்கு இடையிலான போட்டியும் இலங்கையின் அடுத்து சுற்று வாய்ப்பில் தீர்க்கமானதாக இருக்கும்.

# தேசிய போட்டிக்கு தெரிவான இரு மாணவர்கள் கௌரவிப்பு

**நற்பிட்டிமுனை விசேட, சவளக்கடை குறூப் நிருபர்கள்**



கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்து தேசிய போட்டிக்கு தெரிவான நற்பிட்டிமுனை மாணவர்கள் இருவரை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நற்பிட்டிமுனை அல்–கரீம் பவுண்டேஷன் ஏற்பாட்டில் சவளக்கடை அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது.

அல் –கரீம் பவுண்டேஷன் தலைவர் சீ.எம். ஹலீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் பிரதமர் அதிதியாக கலந்து கொண்டு வீரர்களைப் பாராட்டி கௌரவித்தார்.

பரிதி வட்டம் எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற அமீருன் அஸ்தா, நீளம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்ற ஜபாஹிர் முகம்மட் முஆத் ஆகியோர்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# யு.எஸ்.எப். வோறியர்ஸ் சம்பியன்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



யு.எஸ்.எப். சிறீலங்கா அமைப்பின் 6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு செயற்பாட்டாளர்களுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிநேகபூர்வ முக்கோணத் தொடரில் யு.எஸ்.எப். வோறியர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

லீடர் அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பைட்டர்ஸ் அணியை எதிர்கொண்ட வோறியர்ஸ், 31 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்த நிகழ்வுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் மேலும் பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் வெற்றி பெற்ற அணிக்கு கிண்ணமும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

# ராசாவின் அதிரடி ஆட்டத்தால் சிம்பாப்வே அணிக்கு வெற்றி



சிகந்தர் ராசாவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் அயர்லாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றில் சிம்பாப்வே அணி தனது முதல் போட்டியில் 31 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஹோபார்டில் பி குழுவுக்காக நேற்று (17) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட சிம்பாப்வே அணிக்கு மத்திய வரிசையில் வந்த ராசா 48 பந்துகளில் ஐந்து பௌண்டரிகள், ஐந்து சிக்ஸர்களுடன் 82 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை பெற்றது.

எனினும் பதிலெடுத்தாடிய அயர்லாந்து அணி ஓட்டம் பெறும் முன்னரே முதல் விக்கெட்டை இழந்த நிலையில், அதில் இருந்து கடைசி வரையில் மீண்டு வர முடியாமல்போனது. இறுதியில் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களையே பெற்றது.

# மேற்கிந்திய அணிக்கும் அதிர்ச்சித் தோல்வி

டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றில் இலங்கையைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் அணியும் ஸ்கொட்லாந்துக்கு எதிரான தனது முதல் போட்டியில் 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்தது.

ஹோபார்ட்டில் பி குழுவுக்காக நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணிக்கு ஜோர்ஜ் முன்சி மற்றும் மிச்சல் ஜோன்ஸ் சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தனர்.

இருவரும் ஆரம்ப விக்கெட்டுக்கு 38 பந்துகளில் 55 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். முன்சி 53 பந்துகளில் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களை பெற்றதோடு ஜோன்ஸ் 17 பந்துகளில் 20 ஓட்டங்களை குவித்தார்.



இதன்மூலம் ஸ்கொட்லாந்து 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாட வந்த மேற்கிந்திய தீவுகள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 18.3 ஓவர்களில் 118 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஜேசன் ஹோல்டர் 33 பந்துகளில் 38 ஓட்டங்களை பெற்றபோதும் அந்த அணி ஸ்கொட்லாந்து நிர்ணயித்த வெற்றி இலக்கை கடைசிவரை நெருங்கக் கூட இல்லை. இரண்டு முறை டி20 உலக சம்பியனான மேற்கிந்திய தீவுகள் அணி இந்தத் தோல்வியுடன் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறுவதற்கு அடுத்த இரு போட்டிகளிலும் வெற்றி பெறுவது கட்டாயமாகியுள்ளது.

ஆரம்ப சுற்றின் இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பெறும் அணிகளே வரும் ஒக்டோபர் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் ஸ்கொட்லாந்து அணி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக சுப்பர் 12 சுற்றுக்கு மேன்னேற வலுவான அடித்தளத்தை இட்டுள்ளது.

# உக்ரைனிய தலைநகர் மீது ரஷ்யா மீண்டும் தாக்குதல்

உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று குறைந்தது நான்கு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதற்கு ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட "கமிகாஸ் ஆளில்லா விமானங்கள்" மீது உக்ரைன் ஜனாதிபதி ஆலோசகர் குற்றம்சாட்டியுள்ளார்.

தலைநகரில் நேற்றுக் காலை வான் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கும் சைரன் ஒலி எழுப்பப்பட்ட நிலையில் தாக்குதல் இடம்பெற்றிருப்பதோடு இதனைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் சைரன் ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

"கமிகாஸ் ஆளில்லா விமானங்கள் மூலம் தலைநகர் தாக்கப்பட்டுள்ளது" என்று ஜனாதிபதியின் தலைமை அதிகாரி அன்ட்ரி யெர்மக் சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளார். "இது தமக்கு உதவும் என்று ரஷ்யர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இது அவர்களின் விரக்தி நிலையை காட்டுகிறது" என்றும் அவர் கூறினார்.



உக்ரைன் தலைநகர் மற்றும் ஏனைய நகரங்கள் மீது ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல்களை நடத்தி சரியாக ஒரு வாரத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆளில்லா வான் தாக்குதல்களால் மத்திய செவ்சென்கிவ்ஸின் பல கட்டடங்கள் சேதம் அடைந்திருப்பதாகவும் குடியிருப்பாளர்களை பாதுகாப்பான இடத்தில் அடைக்கலம் பெறும்படி அறிவுறுத்தி இருப்பதாகவும் கீவ் மேயர் விடாலி கிளிச்கோவ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு டொன்பாஸ் பிராந்தியங்களின் இரு நகரங்களில் உக்கிர மோதல் வெடித்திருக்கும் நிலையிலேயே தலைநகர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் சில பகுதிகளில் உக்ரைன் துருப்புகள் முன்னேற்றம் கண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# பிரிட்டன் பிரதமரை வெளியேற்ற ஆளுங்கட்சி எம்.பிக்கள் முயற்சி

பிரிட்டன் பிரதமர் லிஸ் டிரஸை வெளியேற்ற அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாரம் முயற்சி மேற்கொள்ளவுள்ள நிலையில் அது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் அலுவலகம் எச்சரித்துள்ளது.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா கடிதங்களை சமர்ப்பிக்க 100க்கும் அதிகமான ஆளும் கன்சர்வேடிவ் கட்சி எம்.பிக்கள் தயாராகி இருப்பதாக 'டெய்லி மெயில்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

2016இல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகியது தொடக்கம் அரசியல் குழப்பத்தால் மூன்று பிரதமர்கள் தமது பதவியை இழந்துள்ளனர்.



இந்நிலையில் பிரதமருக்கு பதவி விலகி கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரை உடன் நியமிக்க எம்.பிக்க வலியுறுத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது.

வரிகளைக் குறைப்பதான வாக்குறுதிகளை அடுத்தே கடந்த மாதம் இடம்பெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் தலைமை போட்டியில் டிரஸ் வெற்றி பெற்றிருந்தார். எனினும் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை அவர் கைவிட்ட நிலையிலேயே பதவியை தக்கவைக்க போராட வேண்டி ஏற்பட்டுள்ளது.

# அமெரிக்க-இந்திய வர்த்தக கொள்கை மாநாடு நவம்பரில்

வரும் நவம்பர் மாதம் வொசிங்டனில் நடைபெறவுள்ள அமெரிக்க–இந்திய வர்த்தக கொள்கை மாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்தும் விவகாரங்கள் குறித்து இறுதி செய்வதற்காக அமெரிக்க வர்த்தக அதிகாரிகள் அடுத்த வாரம் புது டெல்லி வரவுள்ளனர்.



இந்த சந்திப்புக்கு சில வாரங்களே இருக்கும் நிலையில், குறுகிய எதிர்காலத்தில் மிதமான மற்றும் கூடுதல் முன்னேற்றங்களுக்கு வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் நவம்பர் எட்டில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கான இந்திய தூதுக்குழுவுக்கு வர்த்தக அமைச்சர் பியுஷ் கொயால் தலைமை வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நைஜீரிய வெள்ளத்தால் பலி 600ஆக அதிகரிப்பு



நைஜீரியாவில் கடந்த ஒரு தசாப்தத்தில் ஏற்பட்ட மோசமான வெள்ளத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 600ஐ தாண்டி இருப்பதாக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தால் 1.30 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி உள்ளதாகவும் நைஜீரிய மனிதாபிமான விவகார அமைச்சர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

'துரதிருஷ்டவசமாக இன்றாகும்போது (16) 603 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன' என்று மனிதாபிமான விவகார அமைச்சர் சத்யா உமர் பாருக் தெரிவித்துள்ளார். நைஜீரியாவில் பருவகால வெள்ளம் வழக்கமாக நிகழ்கின்றபோதும் இந்த ஆண்டு அது மோசமாக உள்ளது.

# ஐ.எம்.எப்., உலக வங்கியுடன் இந்திய நிதி அமைச்சர் பேச்சு



சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்), உலக வங்கி என்பவற்றின் வருடாந்த கூட்டங்களிலும் ஜி20 அமைப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுனர் கூட்டங்களிலும் கலந்து கொள்ளவென அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அந்நிறுவனங்களின் உயர் மட்டத்தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து இருபக்க பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார்.

அத்தோடு பூட்டான், எகிப்து, நெதர்லாந்து, சவூதி அரேபியா, தென் கொரியா ஆகிய நாடுகளது நிதியமைச்சர்களுடனும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ள இந்திய நிதியமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்புக்களின் போது பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் பல முக்கிய கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.